விலை: 60.00
பக்கங்கள் : 20
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 23
ஒலி 224 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை (31.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஓகஸ்ட் மாதத்திற்கு எரிபொருளை கொள்வனவு செய்ய பணம் இல்லை

### கைவிரித்தார் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

எதிர்வரும்ஓகஸ்ட் மாதத்திற்கான எரிபொருளை இறக்குமதி செய்வது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதத்திற்கான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 150 மில்லியன் டொலர்களை கூட வழங்க முடியாது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, எரிபொருள் இறக்குமதி 19

## நெல்லியடி கிழக்கில் கொரோனாவால் ஒருவர் மரணம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் வயோதிபர் ஒருவர் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

நெல்லியடி கிழக்கைச் சேர்ந்த 94 வயதுடைய வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் முதுமை காரணமாக சளி மற்றும் தொற்றா நோயால் பாதிக்கப்பட்ட 19

## கொரோனா +3 மரணம் +83 தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மேலும் மூவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த மரணங் 19

## அடுத்த வாரமும் 3 நாட்களே பாடசாலை

(கொழும்பு)

அனைத்து அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் ஓகஸ்ட் 1 முதல் 5 வரை வாரத்தில் திங்கள், செவ்வாய் மற்றும் வியா 19

## பொருளாதார நெருக்கடி மோசமானால்

# இலங்கை என்ற நாடே இல்லாமல் போய்விடும்

### சர்வகட்சி அரசே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரேவழி - ரணில்



(கொழும்பு)

நாட்டில் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி இன்னும் மோசமானால் இலங்கை என்ற நாடே இல்லாமல் போய்விடும். அனைத்து பிரச்சினைகளுக்கும் சர்வகட்சி அரசே வழி என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி அரசாங்கத்தில் ஒருபோதும் இணையோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

" பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துபோட்டு அமையும் சர்வகட்சி அரசில் தமது கட்சி ஒருபோதும் இணையாது." என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசில் இணையுமாறு அழைப்பு விடுத்து அனைத்து எம்.பிக்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் 19

## பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகளை வழமைபோல முன்னெடுக்கவே அவரகாலச் சட்டம் அமுல்

### பிரதமர் தினேஷ் குணவர்தன



(கொழும்பு)

பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகளை வழமைப்போல முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பிரதமர் தினேஷ் 19

## இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணிலுடன் பேசத் தயார்

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசத் தயாராகவே நாங்கள் இருக்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் வட்டாரத்தில் நேற்று மக்களுடனான சந்திப்பு நடைபெற்றது குறித்த சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 19

## வெளிநாட்டு கையிருப்பை அதிகரிக்க விதிமுறைகளை கடுமையாக்க மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரிக்கும் நோக்குடன் சில விதிமுறைகளை கடுமையாக்க இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது.

இதனால், உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் வர்த்தக சமூகம் ஆகியவை ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவிப்பை இலங்கை 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடும் பொருளாதார நெருக்கடியால்

# இலங்கையில் விபசாரத்தில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ள இலங்கை ஆடைத்தொழிற்துறையில் வேலைவாய்ப்பை இழந்த பெண்கள் விபசாரத்திற்குள் தள்ளப்பட்டுள்ளதால் அதன் பெண்கள் தொடர்பில் இன்னுமொரு நெருக்கடியை எதிர் கொள்கின்றது என ஏஎன்ஐ செய்தி வெளியிட்டுள்ளது.

ஆடைத்தொழிற்துறையில் வேலைவாய்ப்பை இழந்த பெண்கள் வருமானத்திற்காக விபசாரத்திற்குள் நுழைகின்றனர் என ஏஎன்ஐ தெரிவித்துள்ளது.

22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கை முன்னர் ஒருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ள நிலையில் இலங்கை மக்கள் கடும் நெருக்கடியையும் பட்டினி அபாயத்தையும் எதிர்கொள்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையால் உண்டான நெருக்கடி பல குடும்பங்களை வாழ்வின் விளிம்பிற்கு தள்ளியுள்ளது, பெருமளவு இலங்கையர்கள் தங்கள் குடும்பங்களை கவனிப்பதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர், உணவையும் அத்தியாவசியப் பொருட்களையும் பெறுவதில் அவர்கள் நாளாந்த பிரச்சினைகளை சந்திக்கின்றனர்.

இந்த மோசமான நிலைமை நாட்டில் புதிய விபசார விடுதிகள் உருவாகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது, வாழ்வாதாரத்திற்காக பெண்கள் விபசாரத்தில் ஈடுபடவேண்டிய நிலையேற்பட்டுள்ளதால் கடந்த சில மாதங்களாக விபசாரம் 30 வீதமாக அதிகரித்துள்ளது என பாலியல் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் ஸ்டான்ட் ஒவ் மூவ்மென்ட் லங்கா தெரிவித்துள்ளது. (ம-7)

# சர்வகட்சி அரசு என்பது நகைச்சுவையாக மாறிவிட்டது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கம் என்ற பேச்சுக்கள் தற்போது நகைச்சுவையாக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து பிரதமருக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து 19ஆவது திருத்தத்தை மீண்டும் இந்த அரசாங்கம் கொண்டுவருமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக சரத் பொன்சேகா கூறினார்.

ஆகவே சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்வதில் சிக்கல் காணப்படுவதாகவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுட்டிக் காட்டினார்.

தற்போதைய சூழ் நிலையில் தேர்தலை நடத்த முடியாது என்றும் அதற்குப் பதிலாக புதிய சக்தி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும்சரத்பொன்சேகா குறிப்பிட்டார். (ம-7)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு.க.சிவசங்கர் அவர்களின் பாசமிகு மனைவியான

திருமதி

### சிவசங்கர் பாமா



அவர்கள் 29.07.2022 அன்று திடீர் சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தோற்றம்: 22.10.1974

மறைவு: 29.07.2022

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்,**
**மாவிட்டபுரம், தெல்லிப்பழை.**

(12305)


### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

### கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(12307)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



உலக சமுதாய சேவா சங்கம் யாழ்.மண்டலத்தில் குடும்ப உறுப்பினர்களாக ஒன்றிணைந்து மனவளக்கலைப் பயிற்சியை விரிவுபடுத்திச் செல்லும் திரு.திருமதி **பாலகிருஷ்ணன் கலாநிதி** அவர்களின் பாசமிகு மாமி, தாயார்

அமரர்

### சின்னத்துரை தெய்வானப்பிள்ளை

அவர்கள் இறைபதமுற்ற செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரில் அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனின் திருவடிக்கீழ் நித்தியானந்தந்தைப் பெற்று அமைதிபெற பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4679)

**WCSC JAFFNA ZONE**

## மரண அறிவித்தல்

செல்வி

### சிவப்பிரகாசம் செல்வரஞ்சினி (M.A)

**(ஆசிரியை - யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்)**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08.01.1963 | 29.07.2022 |

யாழ்.வடமராட்சி, முள்ளி கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவப்பிரகாசம் செல்வரஞ்சினி 29.07.2022 வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் யோகராணி (ஆசிரியை - நு/கிறிஸ்லஸ் பாம் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வத்தின் (அதிபர் - நு/பத்தனை தமிழ் வித்தியாலயம்) அன்பு மைத்துனியும் நிகிலாவின் பெரியம்மாவும் காலம்சென்ற கந்தசாமி மற்றும் யோகராசா (ஓய்வுநிலை பேராசிரியர் - கிழக்குப் பல்கலைக்கழகம்), விஜயதிலகி ஆகியோரின் அன்பு மருமகளும் பவானி, பூங்கோதை, அங்கையற்கண்ணி, சுகஸ்திகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான நடராசா, சின்னத்துரை ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முள்ளி, கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(C-4680)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் முழுவதும் வேகமாகப் பரவும் புதிய வைரஸ் இலங்கையிலும் கண்டறிவு

## உயிரியல் துறை தலைவர் கலாநிதி. சந்திம ஜீவந்தர

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது பரவி வரும் கொவிட் வைரஸ் பிறழ்வானது நாட்டில் ஒரு மோசமான நிலைமையை உருவாக்கக்கூடும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் துறையின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**



BA5 எனப்படும் ஒமிக்ரோன் உப பிறழ்வு உலகம் முழுவதும் மிக வேகமாக பரவி வருவதாக அவர் தெரிவித்தார்.

"ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் உள்ள எங்கள் நிறுவனத்தின் சமீபத்திய மரபணு ஆய்வின்படி, இலங்கையில், குறிப்பாக கொழும்பைச் சுற்றிய பகுதிகளில், BA5 எனப்படும் ஒமிக்ரான் உப பிறழ்வு மிகவும் பரவலாகக் கண்டறியப்பட்டுள்ளது. உலகில் தற்போது கொவிட் பரவல் வேகமாக பரவுவதற்கு காரணம் இந்த பிறழ்வாகும்.

கொவிட் -19 தொற்று கண்டறியப்பட்ட பின்னர் வேகமாகப் பரவக்கூடிய வைரஸ் பிறழ்வு இதுவாகும். எனவே, ஆபத்து உள்ளது. எதிர் காலத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதற்கு நாம் தயாராக வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற போராட்டம் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் தம்மிக்கா விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருவதற்காக பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களில் 45 வீதம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் போராட்டம் காரணமாக சுற்றுலாத்துறை பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு, மின்தடை போன்ற காரணிகளும் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை தர விரும்பாமைக்கான காரணிகள் ஆகும்.

ஒகஸ்ட் மாதம் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் இலங்கைக்கு வருகை தரும் மாதம் எனவும் கூடுதல் எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சர்வகட்சி அரசில் இணைவதற்கு மனோ, ரிஷாத், ஹக்கீம் பச்சைக்கொடி



(கொழும்பு)

சர்வகட்சி அரசில் இணைவதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அடுத்த இரு வாரங்களுக்குள் சர்வகட்சி அரசு அமைப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ள ஜனாதிபதி, சர்வகட்சி அரசை அமைப்பதற்கு ஒன்றிணையுமாறு நேற்று முன்தினம் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் அழைப்பும் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக கட்சிகளுடன் ஜனாதிபதி நேரில் கலந்துரையாடி வருகின்றார். இதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் அவர் பேச்சு நடத்தினார். அக்கட்சியும் சாதக சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் சம்பிக்க ரணவக்க எம்.பி.யும் சாதகமான நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

இந்நிலையிலேயே மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மற்றும் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ரணிலுக்கு நேசக்கரம் நீட்டவுள்ளதாக தகவல்கள் வெளியாகின. (நி)

# ஜூலை மாத பணவீக்கம் 60.8 வீதமாக உயர்வு

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் இந்த மாதத்தில் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

அந்நிய செலாவணிகையிருப்பு குறைந்து உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை காரணமாக இலங்கையின் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

நுகர்வோர் விலைகள் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 60.8 % அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் போக்குவரத்து செலவுகள் 143.6 % அதிகரித்ததாகவும் உணவு விலைகள் 90.9% அதிகரித்ததாகவும் குறித்த தரவு காட்டுகிறது. (நி)

# தலதா மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கண்டி)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நேற்று சனிக்கிழமை தலதாமாளிகைக்கு விஜயம் மேற்கொண்டு சிறப்பு வழிபாடுகளில் பங்குபற்றினார். (நி)

# கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தாவிடில் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.




நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை 131 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாளாந்த கொரோனாத் தொற்றாளர்களுடன் ஒப்பிடும் போது தற்போது கொரோனாத் தொற்றாளர்களின் வேகம் அதிகரித்து வருவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொரோனாத் தொற்றினை கட்டுப்படுத்த அனைவரும் இணைந்து செயற்படவில்லையாயின் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினேஷ் கார்திக் அபாரம் இந்தியா அதிரடி வெற்றி



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட் டியில், இந்திய கிரிக்கெட் அணி 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள் ளது.

ட்ரினிடெட் மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய கிரிக்கெட் அணி, நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, ரோஹித் சர்மா 64 ஓட்டங்களையும் தினேஷ் கார்திக் ஆட்டமிழ க்காது 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சார்ரி ஜோசப் 2 விக்கெட்டுகளையும் ஒபேட் மெக்கொய், ஹோல்டர், அகீல் ஹொசைன் மற்றும் கீமோ போல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 191 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 122 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், இந்திய கிரிக்கெட் அணி 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஷமாரா புரூக்ஸ் 20 ஓட்டங்களையும் கீமோ போல் ஆட்டமிழக்காது 19 ஓட்டங் களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஹர்ஸ்தீப் சிங், அஸ்வின் மற்றும் ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் புவனேஸ்வர் குமார் மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 19 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்கலாக, ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட தினேஷ் கார்திக் தெரிவு செய்யப்பட்டார். (4)

# 100 ஆவது டெஸ்டில் ஏஞ்சலோ மத்யூஸ்



பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்டில் வெற்றி பெற்றதன் மூலம், தனது 100 ஆவது டெஸ்டில் வெற்றி பெற்ற வீரர் என்ற பெருமையை ஏஞ்சலோ மத்யூஸ் பெற்றுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி 1-1 என்ற கணக்கில் சமனில் முடித்துள்ளது. முதல் டெஸ்டில் தோல்வியை சந்தித்த இல ங்கை, அதற்கு பழி தீர்க்கும் வகையில் 246 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

இந்தப்போட்டி இலங்கை வீரர் ஏஞ்சலோ மத்யூஸிக்கு 100 ஆவது டெஸ்ட் ஆகும்.

ஆனால் அவரால் பெரி தளவில் ஓட்டங்களை எடு க்க முடியவில்லை. முதல் இன்னிங்சில் 35 ஓட்டங் கள் எடுத்த மத்யூஸ், இரண்டாவது இன்னிங்சில் 42 ஓட்டங்கள் எடுத்தார்.

எனினும் இலங்கை அணி வெற்றி பெற்றதன் மூலம், ஏஞ்சலோ மத்யூஸிக்கு 100 ஆவது டெஸ்ட் வெற்றி மகுடமாக அமைந்துள்ளது.


அவருக்கு வீரர்கள் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை அணியில் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 6 ஆவது வீரர் ஏஞ்சலோ மத்யூஸ் ஆவார்.

அவருக்கு முன் மஹேல ஜெயவர்த்தனே, குமார் சங்கக்காரா, முத்தையா முரளிதரன், சமிந்தா வாஸ் மற்றும் சனத் ஜெயசூரியா ஆகியோர் 100 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாடியுள்ளனர். (4)

# மரண அறிவித்தல்

மலர்வு 15 – 10 – 1938



உதிர்வு 26 – 07 – 2022

## சூசைப்பிள்ளை பிரான்சிஸ் போல்

(ஓய்வுபெற்ற தேயிலை தொழிற்சாலை அதிகாரி)

புலோலியைப் பிறப்பிடமாகவும் நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை பிரான்சிஸ் போல் அவர்கள் கடந்த **26.07.2022** செவ்வாய்க்கிழமை காலை நுவரெலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - கத்தரினம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை - லேயினாப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மாகிறேற் செல்வராணி அவர்களின் பாசமிகு கணவரும் சூசானா செல்வரஞ்சினி, கிறிஸ்டி ராஜ்குமார், சேவியர் சுரேஷ்குமார், ஸ்டெல்லா சாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வின், வதனி, றேபோ, நிரஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெரேமியா, ஜெனிபர், ஜொனாதன், ஹரி, நியோலா, அனிக்கா, லாலிந்தன், மோக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, ஜெயராட் மற்றும் லூர்தம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை, மரியமுத்து, அன்னம்மா, செல்வரட்ணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், மரியம்மா, காலஞ்சென்ற நீக்கில்லாப்பிள்ளை, காலஞ்சென்ற அமிர்தநாயகம் மற்றும் ரீற்றா ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நுவரெலியாவில் இருந்து கரவெட்டிக்கு எடுத்து வரப்பட்டு அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (01.08.2022) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு கரவை பரலோக மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதன்பின் நல்லடக்கத்துக்காக கரவை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

பெறாமகள் : 077 711 1011
(C-4682) மகள் : 071 815 3024

தகவல் : குடும்பத்தினர்

# மூதாளர் அன்பு இல்லத்தில் முதியோரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

**சைவத் தமிழ்ச்சங்கம் - அருள்மிகு சிவன் கோவில்**
**அன்பே சிவம் அறக்கட்டளை**
**சிவபுரவளாகம் - மூதாளர் அன்பு இல்லம்**
**மூதாளர் அன்பு இல்லத்தில் இணைந்து வாழ விருப்புடையோர்**
**" பெற்றோரைப் பேணுதல் பிள்ளைகளின் கடமை"**

எமது பெற்றோரைக் காப்பதும் பராமரிப்பதும் தெய்வத்திற்காற்றும் தொண்டிலும் மேலாகக் கருதும் நாம் தற்போதைய அவசர உலகில் அவர்களை சரிவரக் கவனிப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றோம். அதிலும் தனித்து வாழும் மூதாளர்கள் படும் இன்னல்கள் சொல்லிலடங்கா. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையும் இயற்கை அழிவும். இடப்பெயர்வும் எமது பண்பாட்டு வாழ்வை மேலும் அழிவுக்குள்ளாக்கியது. இந்நிலையில் எமது பாரம்பரிய பண்பாட்டை மீறிய செயற்பாடாக இருந்தாலும் தற்போதையை முதியவர்களின் தேவை கருதி அன்பே சிவம் அறக்கட்டளை சிவபுரவளாகத்தில் நவீன வசதிகளுடன் மூதாளர் அன்பு இல்லத்தினை ஆரம்பிக்கின்றோம். இவ் இல்லம் இலவசமாக தனது சேவையினை ஆற்றவுள்ளது.

எனவே முதற்கட்டமாக மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதனால் தனித்து வாழும் தமது நாளாந்த கடமையினை சுயமாக ஆற்றக்கூடிய மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்ந்து இல்லம் விரிவாக்கம் பெற்று நாளாந்தம் தாதியர், பராமரிப்பாளர் உதவி தேவைப்படுவோரிற்கான சேவையினையும் விரைவில் நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.

அவ் வகையில் கிழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு சில முதியவர்களை இணைக்கவுள்ளோம்.

- ❖ இல்லத்தில் வாழ்வதற்கு 60 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ❖ நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட தனித்து வாழும் மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ❖ விண்ணப்பங்களை A9 வீதி. முகமாலை சிவபுர வளாகத்தில் பெற்று 15.08.2022 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.
- ❖ விண்ணப்பம் அனுப்ப வேண்டிய

முகவரி : (C-4681) தொடர்புகளுக்கு:

நிறைவேற்றுப் பணிப்பாளர்
சிவபுரவளாகம்
A9 வீதி, முகமாலை, பளை.

நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு.குமரேசன் குமணன்
077 622 4038/ 077 617 1397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள் முடிவு செய்தால் 5 நாட்களும் பாடசாலை நடைபெறும்

## கல்வி அமைச்சு

(கொழும்பு)

அரச மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் செயற்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வீட்டிலிருந்தோ அல்லது ஒன்லைன் மூலமோ கற்றல் நடவடிக்கை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டால், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையை ஆரம்பிக்க வலயக் கல்வி மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (நி)

# கோட்டா நாடு திரும்பியவுடன் வழக்குகள் விசாரணை செய்யப்பட வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் மீண்டும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டை விட்டுச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் குடிமகன் என்ற அடிப்படையில், நாட்டுக்கு திரும்பி வர உரிமையுள்ளது.

எனினும், அவர் ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் அனுபவித்து வந்த தண்டனையின்மை வாய்ப்பைப் பயன்படுத்த முடியாது. அவருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# தரம் ஒன்றிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் தரம் 01 இற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடிக்குமாறு பெற்றோர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இது மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி ஒகஸ்ட் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது. (நி)

# எரிபொருள் நெருக்கடியால் கடிதங்கள் கிடைக்க தாமதமாகும்

## தபால் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடிதங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.


ஊழியர்கள் முறையாக கடமைக்கு சமூகமளிக்காததால் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டு தபால் கட்டணங்களை நாளை முதலாம் திகதி முதல் திருத்தியமைக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

திருத்தப்பட்ட கட்டணங்கள் கடந்த 19 ஆம் திகதி விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தபால் சேவை ஊடாக

# 29.7 மில்லியன் பெறுமதியான போதை குளிசைகள் அனுப்பி வைப்பு



(கொழும்பு)

அஞ்சல் பரிவர்த்தனையூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்த பெருமளவான போதைக் குளிசைகள் சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்துக்கு அனுப்பப்பட்ட 2,973 போதைக் குளிசைகளே சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த போதை குளிசைகளின் மொத்த பெறுமதி சுமார் 29.7 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் போதை குளிசைகள் நெதர்லாந்தில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் சுங்க திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி)


### யாழ்ப்பாணம் மாநகர சபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

**மீள்கேள்வி அறிவித்தல் -2022**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக் கட்டணம் : ரூபா **1,000.00**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- **01.08.2022** தொடக்கம் **06.08.2022** ( மு.ப **9.00**- பி.ப **2.30** மணிவரை)
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித் திகதி :- **06.08.2022** பி.ப **12.30** மணிவரை
- கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளல் :- **08.08.2022** முற்பகல் **10.00** மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- **08.08.2022** முற்பகல் **10.00** மணிக்கு
- தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் ரூபா **2,000.00**

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-4678)


# இராசிபலன்

31.07.2022
ஆடி 15, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பின்னிரவு 03.24 மணிவரை
மகம் பிற்பகல் 02.28 மணிவரை
சுபநேரம்- 09.03 -10.33 மணிவரை
இராகுகாலம் -04.33-06.03 மணிவரை
இஸ்லாமிய வருடப்பிறப்பு
சந்திராஷ்டமம்- உத்தராடம், திருவோணம்

**வளவன்**

**மேஷம்** – தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** – பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், இல்லத்தில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்.

**ரிஷபம்** – எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்துக் கொள்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாடு முன்னேற்றம் தரும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும்.

**சிம்மம்** – குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், திடீர் பயணங்கள் உருவாகும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** – பாதியில் நின்ற பணியை மீதியும் செய்வீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், உற்சாகமான நாள்.

**கும்பம்** – புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** – பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொதுநல ஈடுபாடு மகிழ்ச்சி தரும், சகோதரர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** – வரம் தரும் தெய்வங்களை வழிபடும் எண்ணம் உருவாகும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு** – தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள்.

**மீனம்** – அலுவலகப் பணிகள் துரிதமாகும், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

உன் இன்பமும் துன்பமும் உனது கையில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிசையில் நிற்கும் மோ.சைக்கிள்களின் உதிரிப்பாக திருட்டுக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வரிசைகளில் விடப்படும் மோட்டார் சைக் கிள் களில் இருந்து அதன் உதிரிப்பாகங்களை திருடும் சம்பவங்கள் அதிகரித்து வரு கின்றன.

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் எரிபொருள் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வரி சையில் விடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றின் முன் பகுதி யின் பாகம் களவாடப்பட்டுள் ளது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் அச்சு வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் எரி பொருளை பெற்றுக்கொள்ள வரிசையில் விடப்பட்ட "ஜப்பான் 200" ரக மோட்டார் சைக்கி ளின் ஒரு பக்கம் பாகம் கள வாடப்பட்டு இருந்தது.

அதன் பெறுமதி 12 ஆயி ரத்திற்கும் அதிகம் என உரி மையாளர் தெரிவித்து இரு ந்தார்.

இவ்வாறாக வரிசைகளில் இரவு வேளைகளில் விடப்படும் மோட்டார் சைக்கிள்களின் பக்க கண்ணாடிகள், சிக்கனல்கள், கோர்ன் உள்ளிட்ட உதிரிப்பாக ங்கள் களவாடப்படும் சம்பவ ங்கள் அதிகரித்து வருகின் றன. (4-33)

# ஆரோக்கியத்தின் பாதையில் விழிப்புணர்வு ஈருருளிப் பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரோக்கிய நகரத் திட்டத்தினால் முன்னெடுக்க ப்படவுள்ள "ஆரோக்கியத்தின் பாதையில்" என்ற விழிப்புண ர்வு ஈருருளிப் பயணம் நாளை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மரு த்துவ பீடத்தில் இருந்து ஆரம் பிக்கவுள்ள இந்த ஈருருளிப் பயணம் அங்கிருந்து ஆடிய பாதம் வீதி வழியாக கொக்கு வில் சந்தியை அடைந்து, அங் கிருந்து கே.கே.எஸ். வீதி வழி யாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து, அவ் வீதி வழியாக வேம்படிச் சந்தியை வந்தடை யும்.

அங்கிருந்து பலாலி வீதி ஊடாகப் பரமேஸ்வராச் சந் தியை அடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பிரதான வளா கத்தின் நுழைவாயிலில் நிறை வடையவுள்ளது. (4-33)

# பிக்கப் மோதியதில் சிறுவன் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி விற்குட்பட்ட கல்வயல் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்ற விப த்தில் 11 வயதுச் சிறுவன் ஒரு வர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து அண்ணனுடன் கல்வயல் ஊடாக மட்டுவில் நோக்கி துவி ச்சக்கர வண்டியில் பயணித்த 11 வயதுச் சிறுவனே இவ்வாறு விபத்தில் சிக்கி கையில் படு காயமடைந்துள்ளார்.


துவிச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் இருந்து சிறுவன் கீழே விழுந்த நிலையில் பின் பக்கமாக வந்த பிக்கப் வாகனம் சிறுவனின் கையின் மேலாக ஏறியதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேல திக விசாரணைகளை சாவகச் சேரிப் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (4-30)

# அலைபேசி திருட்டுக் கும்பலை சேர்ந்த மூவர் கைது

## 43 அலைபேசிகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 3 மாத ங்களாக அலைபேசிகளைத் திருடிய கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 15 லட்சம் ரூபாய் பெறு மதியான 43 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாவற்குழி மற்றும் அரியா லையைச் சேர்ந்த 23, 24 மற் றும் 27 வயதுடைய சந்தேக நபர்களே யாழ்ப்பாணம் தலை மையக பொலிஸ் நிலைய குற் றத்தடுப்பு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 3 லட்சம் ரூபாய் பெறுமதியான ஐபோன் உட்பட 45 அலைபேசிகள் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்ற ப்பட்டுள்ளன.

போதைப்பொருளுக்கு அடி மையாகியதால் பேருந்துகளில் ஏறி பயணிகளிடம் அலைபேசி யைத் திருடி தப்பிப்பதாக சந் தேக நபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம் பெற்ற அலைபேசித் திருட்டுக ளிலும் இவர்களுக்கு தொடர்பு ண்டு என்று பொலிஸார் தெரி வித்தனர்.

அலைபேசி திருட்டு போயி ருந்தால் உரியவர்கள் யாழ்ப்பா ணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் வந்து அடையாளம் காட்ட முடியும் என்றும் பொலி ஸார் தெரிவித்தனர்.(4-33-104)

# ஆலயத்தில் இருந்த 5 1/2 பவுண் நகைகள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி விற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழம்ம அதிகாலை வேளையில் ஐந்தரைப் பவுண் நகை திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தில் எழுந்தருளியுள்ள தெய்வங்களில் அணியப்பட்டிரு ந்த ஆபரணங்களே இவ்வாறு திரு டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகி றது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை சாவகச்சே ரிப் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (4-30)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்டவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கடல் வழியாக சட்டவிரோத மான முறையில் வெளிநாடு செல்ல இருந்த 12 பேரும் அவ ர்களுக்கு அடைக்கலம் கொடு த்து வீட்டில் தங்க இடம் கொடு த்திருந்த வீட்டு உரிமையா ளரும் பருத்தித்துறை பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டு ள்ளனர். யாழ்ப்பாணம், வடம ராட்சி கிழக்கு, மணற்காடு கடற்கரைக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் வைத்து நேற்று சனிக்கிழமை அதி காலை அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பருத் தித்துறை பொலிஸார் தெரிவித்த னர்.

8 ஆண்களும் 4 பெண்க ளுமே சட்டத்துக்குப் புறம்பாக வெளிநாடு செல்ல முற்பட்டனர் என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், பருத் தித்துறை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவுஸ்தி ரேலியா செல்வதற்கு திட்டமிட்டு இருந்ததாகவும் தெரிவிக்க ப்படுகிறது. (4-33)

# குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் வருடாந்த மஹோற்சவம்

(குப்பிழான்)

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை மாலை உற்சவங்களாக இவ்வா லய மஹோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

இவ்வாலய மஹோற்சவத்தில எதிர்வ ரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் அன்றையதினம் இரவு 7.30 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெற உள்ளதாக மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 72 சூரி 8 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி QS<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி QS Civil Engineer<br>தொ.இ: B/12850 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: சூரி, செவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:படித்தவர்<br>தொ.இ:G/12873 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: சூரி , செவ் 9 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/12851 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: சூரி 4 செவ் 5 இல் உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்:A/L Diploma in English<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: G/12874 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 57 சூரி 8 செவ் 11 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BFA, PGED ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12852 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 4<br>கி.பா: 11 1/4 சூரி, செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: Acca Qualified Tax Manager (Tax Accountant)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் கணக்காளர்<br>தொ.இ:G/12875 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 2<br>கி.பா: 55 சூரி 1 செவ் 12 இல்<br>உயரம் : 5' 5"<br>தகைமை/தொழில்: பலசரக்குக்கடை, வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12854 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 53 சூரி 8 செவ் 5 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:மென்பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி Engineer IT தொடர்பான தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/12879 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 355

Viber 076 636 3378



# ஐ.நா.வின் கயிறு நெரிக்குமா இலங்கையின் கழுத்தை!

இலங்கையின் பொருளாதார அரசியல் நெருக்கடி நிலையினை கொஞ்சமும் கணிக்க முடியாத அளவிற்கு கைமீறிய காளையைப் போல வேகமெடுத்துச் சென்று கொண்டிருக்கிறது.

ஆட்சி மாற்றம், ஊழல் வாதிகளை அகற்றல், சர்வதிகார போக்கை இல்லாதொழித்தல் என்ற கோஷங்களுடன் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் அந்த ஆட்சிக்கு முற்றிலுமாக முடிவு கட்டினர்.

இருப்பினும் தற்போது இருக்கும் ஆட்சி எந்தப்பக்கம் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் அது மக்களுக்கு நன்கு புரியும்.

ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டங்களுக்கு இடையூறு செய்யேன் என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் போராட்டக்காரர்கள் மீது நடந்து கொண்ட விதம் அனைவராலும் கண்டிக்கப்பட்டதெனினும் வன்முறையாளர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து இருப்பது போராட்டக்காரர்களுக்கு இனி இடம் கிடையாது என்பதை எடுத்தியம்புகின்றது. போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தைக் கொண்டு மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சீ.வி.விக் னேஸ்வரன் கூறும்போது ரணில் விக்கிரமசிங்க தனது வீட்டைக் கொளுத்தியதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாய் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினாரோ என ஐயமுற வைக்கிறது எனக்கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நிலை இவ்வாறு இருக்கையில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி அமைக்க முற்றிலும் தடையாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஒரு விடயத்தைக் கூறியிருக்கிறார்.

அதாவது இம்முறை ஐ.நா.வில் இலங்கைக்கு கடும் நெருக்கடி ஏற்படும் எனவும் தற்போதைய அரசாங்கத்தின் சட்டம், ஜனநாயக விதி மீறல்கள் தொடர்பில் ஐ.நா.வில் இலங்கை பதில் சொல்ல வேண்டி வரும் என்றவாறு அவர் கூறியிருக்கிறார்.

இருப்பினும் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற போர்க்குற்றம் தொடர்பில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட பிரேரணைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியதா என்ற கேள்வி இங்கு எழும் அல்லவா?

இங்கு தான் பாதிக்கப்பட்டது தமிழினம் என்ற வஞ்சகம் தலைதூக்கியுள்ளதை நாம் அறிய முடியும்.

இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடி நிலையை உலகம் மிகவும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கிறது என்பது மட்டும் உண்மையாகிறது. அண்மையில் கனடாவின் எதிர்கால பிரதமர் என கணிக்கப்படும் பியர் பொய்லி எவ்ரா ஒரு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

> ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டக்காரர்களுக்கு இடையூறு விளைவிக்கேன் என்பது கூறியவர் ஜனாதிபதியானதும் அவர்கள் மீது நடந்து கொண்ட விதம் அனைவராலும் கண்டிக்கப் பட்டது



சிங்கப்பூரில் தங்கியிருக்கும் கோட்டாபயவை கைது செய்யும் கோரிக்கையை கனடா ஆதரிக்கும் எனவும் தான் கனடாவின் பிரதமரானால் யாழ்ப்பாணத்தில் கனடாவின் தூதரக சேவை அலுவலகத்தை நிறுவுவேன் எனவும் அவர் தெரிவித்து இருக்கும் அதேவேளை இலங்கை தனது தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என யு.எஸ்.எய்ரின் தலைமை நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்து இருக்கும் கருத்தும் இங்கு கவனிக்க வைக்கிறது.

இலங்கையின் தற்போதைய நிலை மிக மோசமாக சென்று கொண்டிருப்பதை உலக நாடுகள் உணர்ந்து இருக்கின்றன.

இருப்பினும் இலங்கையில் அரசியல் நிலை ஸ்திரமடையும் வரை இலங்கைக்கு உதவ எந்த நாடும் தயாராக இல்லை என்பதை மிகத் தெளிவாக அறிவித்திருக்கின்றன.

இலங்கையில் தற்போதைய எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கிட்டாது என்பதற்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்டு செல்லும் வரிசையே நல்ல உதாரணமாகின்றது.

எரிபொருள் அட்டை, QR முறைமை, மோட்டார் வாகன இறுதியிலக்கம் என பல்வேறு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் வரிசையில் அளவும் கறுப்புச்சந்தை வியாபாரமும் இன்று வரை குறைந்ததாய் இல்லை.

பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாய் பொருளாதார சிக்கல், அரசியல் ஸ்திரத்தன்மை என்று இலங்கை கந்தறுந்து காவடியாடும் இவ்வேளையில் கொரோனாத் தொற்று மீண்டும் வேகமெடுக்க ஆரம்பித்துள்ளது.

இச்செய்தி இலங்கையின் அழிவுக்கு வழிவகுக்கும் இடியாய் மக்கள் இதயங்களில் இறங்கியுள்ளது.

எது எவ்வாறோ இலங்கையில் புரையோடியிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவாக மேற்கொண்டால் இந்தநாடு மீட்சி பெறும்.

இல்லையேல் கண்ணுக்குள் வீழ்ந்த தூசியாய் உறுத்திக் கொண்டே தான் இருக்கும். இனங்களுக்கிடையிலான முரண்பாடு.

மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்களுக்கும் ஆட்சியாளர்கள் பதில் கூற வேண்டும். தமிழினத்திற்கான தீர்வை சர்வதேசம் பெற்றுத் தரும் என தமிழினம் நம்புகின்றது. இவ் விடயத்தில் ஐ.நா. இலங்கையின் கழுத்தை இறுக்கும் என்பதை நினைவில் கொள்வோமாக.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற,

அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

எரிபொருள் நிலையங்களில் பெற்றோலுக்காகக் காத்திருக்கும் வரிசையில் பெண்களுக்குத் தனியான ஒரு வரிசை அமைக்க வேண்டும்.

அதேநேரம் முதல் நாளே மோட்டார் சைக்கிளை நிறுத்தி இடம் பிடிக்கிற செயற்பாடு ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது.

இதற்கும் ஒரு முடிவு எட்டப்பட வேண்டும்.

இவ்வாறு கூறிய பண்டிதர் தனது இடத்தில் அமர முற்பட்ட போது, அவசரப்பட்ட விதானையார் விஸ்வலிங்கம்,என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள். பெற்றோல் வரிசையில் இடம் பிடிப்பதற்காக மோட்டார் சைக்கிள்களை முதல் நாளே நிறுத்துவது சரிதானே.

**பண்டிதர் :**

சொந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்து பெற்றோலை பெற்றால் பரவாயில்லை.

இதென்னடா எண்டால், கராச்சில நிற்கிற மோட்டார் சைக்கிளைக் கொண்டு வந்து இடம் பிடித்துவிட்டுப் பின்னர் அந்த இடத்தை 2000 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகுதாம்.

**மூப்பர் :**

இதென்ன நாசமறுப்பு. இப்படியும் ஒரு பிழைப்பு நடக்குதோ.

**சிறாப்பர் :**

நீங்கள் இதைச் சொல்லுறியள் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மையில் உள்ள எரிபொருள் நிலையமொன்றில் சில ஆட்டோக்கள் பிரேதப் பெட்டியை ஏற்றிய படி பெட்டிக்குள்ள பூதவுடல் இருக்கிறதால முன்னுரிமையில் பெற்றோல் அடிச்சிருக்கினம்.

இதைத் தொடர்ச்சியாகச் செய்த போது, அங்கு கடமையில் நின்ற சீருடைக்காரர் ஒருவர் அதை அவதானித்து விட்டு ஒருக்கால் பெட்டியைத் திறந்து பார்ப்பம் எண்ட போது தான் ஆட்டோவில் இருப்பது வெறும் பெட்டி என்ற சங்கதி தெரிய வந்ததாம்.

**சாத்திரியார் :**

என்ன செய்யிறது ஒரு பெற்றோலை எடுப்பதற்கு எப்படி யெல்லாம் யோசிக்க வேண்டிக்கிடக்குது.

**வாத்தியார் :**

சரி என்னவா இருந்தாலும் எரிபொருள் வரிசையில பெண்களுக்கு தனியான வரிசை ஒன்றை அமைப்பது எங்கட தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றுகிற ஒரு விடயம் என்பதால அதனை அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டுமென்றொரு தீர்மானத்தை ஆலடியில நிறை வேற்றுவோம்.

இவ்வாறு வாத்தியார் கூற,

மேற்படி தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



பெற்றோலுக்கான வரிசையில் பெண்களுக்கு தனி வரிசை வேண்டும்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் குலைக்க கங்காணி கார்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி :**

அது சரி, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா வடபகுதியில இருக்கிற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளைப் பழிவாங்குவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது.

இது தொடர்பில் ஒரு [illegible] பதற்கு ஏதும் செய்ய ஏலாதோ.

**சாத்திரியார் :**

எங்கட அரசியல் தலைவர்கள் தங்கடபாடு.

அதால ஒவ்வொருவரும் தமக்கு தமக்கு இருக்கிற அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யத் தலைப்பட்டிருக்கினம்.

அதில இப்ப வடக்கு மாகாண ஆளுநர் தனக்கு இருக்கிற அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் போல.

**விதானையார் :**

என்னைப் பொறுத்த வரை அதிகாரம் என்பது முகாமைத்துவத்தை ஒழுங்குபடுத்துவதற்கான தகைமை.

இதனை யார் துஷ்பிரயோகம் செய்தாலும் கர்வம் கொண்டு நடந்தாலும் அது கேடாகத் தான் முடியும்.

**பண்டிதர் :** என்ன விதானையார் சொல்லுறியள்

**விதானையார் :**

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தனக்கான அதிகாரத்தால் யாருடைய கருத்தையும் கேட்காமல் தலைக்கனம் கொண்டு செயற்பட்டார்.

ஈற்றில் என்ன நடந்தது என்பதை நான் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இராது.

அது மாதிரி எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் பணியாளர்களுடன் அன்பாகக் கதைத்து அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டுத் தீர்வு காண வேண்டும்.

இதை வடக்கு மாகாண ஆளுநரும் பின்பற்றினால் நல்லது.

நாளைக்கு ஜனாதிபதி ரணில், ஆளுநர் ஜீவனை அந்தப் பதவியில் இருந்தும் தூக்கலாம்.அல்லது வட பகுதி மக்கள் இந்த ஆளுநர் எமக்கு வேண்டாம் என்று கோசமும் போடலாம் எது எப்ப நடக்கும் என்று தெரியாத காலம் தான் இப்ப இருக்குது.

. ஆகையால் ஆளுநர் ஜீவன் அனைத்து அரச நிர்வாகிகளுடனும் ஒரு சுமுகமான உறவைப் பேணி தனது மாகாண நிர்வாகத்தைச் செயல்திறன் மிக்கதாக ஆக்க வேண்டும்.

இதைவிடுத்து அவரை இடம்மாற்று,இவரைத் தூக்கு எண்டு படம் காட்டினால், எல்லாம் அம்போ என்றாகிவி டும்.

இருக்கிற கட்டமைப்பை இன்னும் ஆரோக்கியமானதாக ஆக்க வேண்டும். இது தான் அனைவருக்கும் நல்லது.

இவ்வாறு விதானையார் விஸ்வலிங்கம் நீண்டதொரு கருத்துரையைச் சொல்ல ஆலடியில் மௌனம் நிலவியது.

அந்த மௌனத்தினிடையே குரல் கொடுத்த வாத்தியார் வைத்திலிங்கம்; வடக்கில திடமான அரசியல் தலைமை இருந்தால் எல்லாரும் ஒன்று கூடி ஆராய்ந்து எங்கட மாகாணத்தைப் பலப்படுத்த முடியும்.

ஆனால் எங்கட அரசியல் தானே கந்தறுந்து கிடக்குது.இவ்வாறு வாத்தியார்கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா என்பதன் பொருள் பற்றிக் கூறுங்கள்?






பாராளுமன்ற உறுப்பினர்களின் வயது எல்லை எவ்வளவு வியாசரே?

**திவ்வியா — யாழ்ப்பாணம்**

**கியு.ஆர் கோட்டிற்கு பெற்றோல் அடித்தீர்களா வியாசரே?**

இப்படித் தான் கொக்குவில்ல அக்கம்பக்கமுள்ள நிரப்பு நிலையத்தில் நின்றேன்.

ஒரு நிலையத்தில் கியூ.ஆர் கோட் முறை, மற்றையதில் காட் முறை. பிறகென்ன இங்கு அடித்தவர் அங்கும் அங்கு அடித்தவர் இங்குமாக மாறி மாறி அடித்துக் கொண்டே இருந்தனர்.

பாவம் அதிகாரிகளுக்குத்தான் எதுவும் தெரியாமல் முழித்துக் கொண்டிந்தனர்.

கியூ.ஆருக்கு இலகு என்றார்கள் அதுக்கும் கியூ என்பது தான் வேதனையான விடயம்.

**இதழினி — புலோலி**

**இன்றைய நட்பு வட்டாரங்கள் தேவைக்கு மட்டும் பழகும் சுற்று வட்டங்கள் ஆகிவிட்டனவே?**

ஆம்,அது உண்மைதான். எம்முடன் பழகிய எத்தனை நண்பர்கள் இன்றும் எம் நட்பு வட்டத்துக்குள் இருக்கிறார்கள் என்றும் அதில் எத்தனை பேர் எமக்கொரு துன்பம் வரும் போது தோள் தருபவர்கள் என்றும் எண்ணிப் பாருங்கள்.

பிறந்தநாள் வாழ்த்து போடுவதுடன் முடிந்து போகிறது சில நட்புகள். பிறந்தநாள் பார்ட்டியுடன் முடிந்து போகிறது இன்றும் சில நட்புகள் இறக்கும் நாள் வரை தொடர்கிறது. குறிப்பிட்ட சில நட்புகள் உண்மை உணர்வுடன்.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**சிவம் — வதிரி**

**இலங்கையில் ஏதாவது மாற்றம் வர வாய்ப்பு இருக்கிறதா மாமா?**

வாய்ப்பில்லை ராஜா. எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வரிசை அனுமன் வாலாய் நீண்டு சென்று மயானங்களில் முடிகிறது.

உணவுப் பொருட்களின் விலை என்றுமில்லாதவாறு உச்சத்தில் இருக்கிறது.

டொலரின் பெறுமதி ஏறுமுகமாயும் ரூபாவின் பெறுமதி இறங்குமுகமாயும் இருந்தால் எப்படி மாற்றம் வரும்.

இவை எல்லாவற்றையும் விட ஆட்சியாளர்களின் சுயநலப்போக்கு, மக்களின் நலனில் அக்கறை கொள்ளதா தன்மை, பழிவாங்கும் குணம் என நாட்டை மீட்சியடைய இவை அனைத்தும் தடைக் கற்களே.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**பாராளுமன்ற உறுப்பினர்களின் வயது எல்லை எவ்வளவு வியாசரே?**

புதிய ஜனாதிபதி தெரிவுக்காக அண்மையில் பாராளுமன்றில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

அதில் வாக்களிக்கச் சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவை இருவர் பற்றிச் சென்றதான செய்திகள் வெளியாகி இருந்தன.

அரசியலில் அனுபவம் மிக முக்கியமாகின்றது. ரணிலுடன் மிக நெருங்கிய தொடர்பை பேணியது கூட்டமைப்பு. இருந்தும் சாணக்கியனின் வருகைக்குப் பிறகு அது முற்றிலுமாக வேறுபட்டு இருக்கிறது.

கூட்டமைப்பின் கட்டமைப்பு இப்போது முதிர்ந்த அரசியல் பழம் சம்பந்தனிடமா? சட்டத்தரணி சுமந்திரனிடமா? மும்மொழியிலும் வெளுத்து வாங்கும் சாணக்கியனிடமா? என்பதை தெளிவுபடுத்துங்களேன்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தயாபரன் — ஒட்டுசுட்டான்**

**அரசியில் நடுவு நிலை என்பது வகுப்பறையில் ஆசிரியரின் கேள்விக்கு பதில் கூறாது ஒழிந்திருப்பதைப் போன்றதா?**

நடுவுநிலை என்பதற்குள் இரண்டு முகங்கள் உண்டு.

ஒன்று உண்மையாய் நடுவுநிலையாய் இருப்பது.

இன்னொற்று பணம் பொருள் வாங்கி நடுவுநிலைபோன்று நடிப்பது.

இதில் இரண்டாவது ரகத்தில் இருப்பவர்களே அதிகம் பேர்.

என்ன செய்வது அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும். என்பதை படிக்காதவர்கள் அரசியல் செய்தால் நாடு முன்னேறுமா? நாட்டுமக்கள் தான் நிம்மதியாய் வாழ்வார்களா?

**சுதன் — குப்பிழான்**

**தோல்வியுற்று தேசியப் பட்டியலில் வந்தவருக்கு இந்த நிலை எனின் 69 இலட்சம் வாக்கு பெற்றவருக்கும் இந்த நிலையா?**

வெற்றி தோல்வி என்பதற்கு அப்பால் மக்களின் எழுச்சிக்கு முன் எவரும் ஈடு கொடுக்க முடியாது என்பதே உண்மையாகிறது.

மக்களுக்கு ஒரு விடயம் பிடித்துப் போனால் அவர்களை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவர்.

அதுவே மக்களுக்கு அவர்கள் சுயரூபம் தெரிந்துவிட்டால் தூக்கி எறிந்து விடுவார்கள்.

அதன் பின்பு அவர்களால் எழவே முடியாது.

இது 69 இலட்சம் பெற்றவருக்கும் பொருந்தும் மக்களால் நிராகரிக்கப்பட்டவருக்கும் பொருந்தும் அவ்வளவே.

**மதுவன் — மீசாலை**

**ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா என்பதன் பொருள் பற்றிக் கூறுங்கள்?**

ஒருவன் ஓடி ஓடி உழைக்கிறான். உண்ண, உறங்க சொந்த பந்தங்களுடன் கூடி மகிழ நேரமின்றி பணம் என்ற மோகத்தால் இயந்திரமாய் ஓடுகிறான்.


உழைத்த பணத்தை எல்லாம் வங்கியில் இட்டு வட்டி சேர்த்து வருமாணமீட்டுகிறான்.

கடவுளே உழைத்தது இனிப்போதும் ஓய்வெடுப்போம் என்று உட்காரும் போது தான் தெரிந்தது அவருக்கான மரணக் குழியில் அவர் வீழ்ந்து விட்டதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : முத்து
இயற்றியவர் : வைரமுத்து
இசை : ஏ.ஆர்.ரஹ்மான்,
பாடியவர்கள் : எஸ்.பி.பாலசுப்ரமணியம்



ஒருவன் ஒருவன் முதலாளி
உலகில் மற்றவன் தொழிலாளி
விதியை நினைப்பவன் ஏமாளி - அதை
வென்று முடிப்பவன் அறிவாளி

ஒருவன் ஒருவன் முதலாளி...

பூமியை வெல்ல ஆயுதம் எதற்கு
பூப்பறிக்க கோடரி எதற்கு
பொன்னோ பொருளோ போர்க்களம் எதற்கு
ஆசை துறந்தால் அகிலம் உனக்கு

ஒருவன் ஒருவன் முதலாளி...

மண்ணின் மீது மனிதனுக்காசை
மனிதன் மீது மண்ணுக்காசை
மண்ணின் மீது மனிதனுக்காசை
மனிதன் மீது மண்ணுக்காசை
மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது
இதை மனம்தான் உணர மறுக்கிறது
கையில் கொஞ்சம் காசு இருதால்
நீதான் அதற்கு எஜமானன்
கழுத்து வரைக்கும் காசு இருந்தால்
அதுதான் உனக்கு எஜமானன்
வாழ்வின் அர்த்தம் புரிந்துவிடு
வாழ்க்கையை வாரிக் குடித்துவிடு

ஒருவன் ஒருவன் முதலாளி...

வானம் உனக்கு பூமியும் உனக்கு
வரப்புகளோடு சண்டைகள் எதற்கு
வானம் உனக்கு பூமியும் உனக்கு
வரப்புகளோடு சண்டைகள் எதற்கு

வாழச் சொல்வது இயற்கையடா
வாழ்வில் துன்பம் செயற்கையடா
பறவைகள் என்னைப் பார்க்கும்போது
நலமா நலமா என்கிறதே
மொட்டுக்கள் மெல்லத் திறக்கும்போது
முத்து முத்து என்கிறதே
இனிமை இனிமேல் போகாது - அட
முதுமை எனக்கு வாராது

ஒருவன் ஒருவன் முதலாளி...

பூமியை வெல்ல ஆயுதம் எதற்கு
பூப்பறிக்க கோடரி எதற்கு
பொன்னோ பொருளோ போர்க்களம் எதற்கு
ஆசை துறந்தால் அகிலம் உனக்கு

ஒருவன் ஒருவன் முதலாளி
உலகில் மற்றவன் தொழிலாளி
விதியை நினைப்பவன் ஏமாளி - அதை
வென்று முடிப்பவன் அறிவாளி

# இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெறுமா

தெற்காசிய பிராந்தியத்தின் இயற்கை வனப்பும் நான்கு பக்கமும் கடலினால் சூழப்பட்ட ஒரு நாடாக இலங்கை காணப்படுகின்றது. இலங்கை மிக நீண்ட காலம் அந்நிய இனத்தவர்களின் ஆட்சியின் கீழ் காணப்பட்டது. இந்த வகையில் 1505-1657 வரை போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழும் 1657-1796 வரை ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழும் 1796 தொடக்கம் 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் நண்காம் திகதி வரை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கை காணப்பட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு இலங்கையில் இன முரண்பாடு தோற்றம் பெறுகின்றது. இதற்கான பிரதான காரணம் பிரித்தானியர்களின் பிரித்தாளும் தந்திரம் ஆகும். இதனை விட 1948 இல் பிரஜாவுரிமை சட்டம் 1956 இல் தனி சிங்களச் சட்டம், 1970 இல் கல்வி தரப்படுத்தல் சட்டம் மற்றும் 1956 இல் மேற்கொள்ளப்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தம், 1965 இல் மேற்கொள்ளப்பட்ட டட்லி செல்வா ஒப்பந்தம் ஆகியன நிறைவேற்றப்படாமை மற்றும் குடியேற்ற திட்டங்கள் காரணமாக இலங்கையில் இனமுரண்பாடு ஏற்பட்டு இதன் வளர்ச்சிக் கட்டமாக இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம் பெற்ற காலத்தில் கூட இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை.

ஆனால் தற்போது இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு உள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமாக இலங்கையின் உள்நாட்டுப் போர், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமற்ற அபிவிருத்தி திட்டங்கள், இலங்கை வெளிநாடுகளிடம் இருந்து வாங்கிய கடன், இலங்கையில் தவறான பொருளாதர அபிவிருத்திக் கொள்கைகள், இலங்கையின் உற்பத்தி செயற்பாடுகள் குறைவடைந்தமை மற்றும் Covid -19 இன் தாக்கம் போன்றன முக்கியமான காரணங்களாக அமைகின்றன.

இதனை விட ஆட்சியாளர்களின் இலஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்கள் போன்றன இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்தன. இந்த வகையில் இலங்கையானது சீனா, இந்தியா போன்ற நாடுகளிடம் இருந்து அதிகளவான கடன்களினை வாங்கியது. இதில் சீனாவே இலங்கைக்கு அதிகளவான பண உதவியினை வழங்கியது.

கொவிட் தொற்று காரணமாக இலங்கையின் அந்நியச் செலாவணி வீழ்ச்சியடைய தொடங்கியது. இதனால் இலங்கையில் கையிருப்பில் உள்ள டொலர்கள் குறைவடைய தொடங்கியது. டொலரின் பெறுமதி அதிகரிக்க தொடங்க இலங்கையின் ரூபா பெறுமதி குறைய தொடங்கியது. இதன் விளைவாக இலங்கையில் எரிபொருள் பிரச்சினை , எரிவாயு பிரச்சினை, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற்றன.

மக்கள் வீதிகளில் இறங்கி போராட தொடங்கினார்கள். இப்பிரச்சினைகளினை நிவர்த்தி செய்யும் பொருட்டு இலங்கை பல நாடுகளிடம் நிதி உதவி, பொருள் உதவியினை கோரியது. இது மாத்திரம் இன்றி சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன் உதவி கோரியது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுக் கொண்டு உள்ளன. இதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கக் கூடிய பணம் பொருளாதார ஸ்திரத்தன்மையை சரிசெய்யக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கும். மற்றும் இலங்கை இந்தியாவிடம் இருந்து கட்டம் கட்டமாக எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களினை பெற்றுக் கொண்டது. சீனா அரசாங்கமும் இலங்கைக்கு பண உதவி மற்றும் பொருள் உதவி வழங்கிய போதும் தற்போது இலங்கை இந்தியாவுடனேயே அதிநெருக்கமான வெளி உறவுக் கொள்கையினை பேணி வருகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் உச்சகட்டமாக மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களினை மேற்கொண்டு இதன் பிரதிபலிப்பான முதலில் இலங்கையின் பிரதமர் மகிந்த ராபக்ஷ பதவி விலகினார். இதனைத் தொடர்ந்து இலங்கையின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்சவும் பதவியில் இருந்து விலகினார். இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள், அரபு நாடுகள், சீனா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்கு நிதி உதவி மற்றும் பொருள் உதவி வழங்குவதாக கூறி உள்ளன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மேற்கூறப்பட்ட நாடுகள் உதவிகள் மற்றும் கடன்களை வழங்கினாலும் இலங்கையின் வருமானத்தினை அதிகரிக்கக்கூடிய செயற்பாடுகளினை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதாவது நாடளாவிய ரீதியில் வருமானம் தரக்கூடிய தொழிற்சாலைகளினை அமைக்க வேண்டும். உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்குவதன் மூலம் பணப் பெறுமதி கூடுவதற்கான வாய்ப்புக்களை அமைக்க வேண்டும் சுற்றுலா வருவாயை உயர்த்துவதற்கான சுற்றுலாத் துறை மேம்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். நாட்டில் மீன்பிடித்துறையினை அபிவிருத்தி செய்ய வேண்டும், அதிகளவான வேலை வாய்ப்பினை உருவாக்க வேண்டும் மற்றும் இலங்கையில் விவசாயத்தினை ஊக்குவிக்க வேண்டும். அதற்கான பொறிமுறைகளை உடன் அமுலாக்குவதன் வாயிலாக அத்தியாவசிய உணவுப் பொருளாதாரத்தை மேம்படுத்தல் அவசியமாகும்.

நாட்டிற்கு வருமானம் தரக்கூடிய பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களினை மேற்கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்ட செயற்பாடுகளினை மேற்கொள்வதன் ஊடாக வீழ்ந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தினை பண உதவியுடன் இணைந்து மீள கட்டியெழுப்ப முடியும் அப்போது தான் இலங்கையின் பொருளாதரம் மிகச் சிறப்பான நிலைக்கு கொண்டு செல்லப்படும். இச் செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொண்டாலே இலங்கையின் பொருளாதாரத்தினை ஸ்திர நிலைக்கு கொண்டுவர முடியும்.



மேரி வினு ஜேசுதாஸ்
சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

> **மைதானத்தில் நடந்துகொண்டிருந்த நீதனுக்கு அதிர்ச்சியும் ஆச் சர்யமும் ஒருசேர முகத்தில் அறைந்தன. தனக்கு யார் இன்றைக்கு விருந்தினர் வரப்போகிறார்கள்? அரைவாசி குடித்த பிளாஸ்திக் குவளையை மைதானத்தின் மூலையிலிருந்த குப்பைத்தொட்டியில் மெதுவாக எறிந்தான்.**

## வலி சொல்லும் தொடர்... 41

அல்பா கம்பவுண்டுக்கு முன்பாக வட்டமாகக் கூடியிருந்த தமிழ் அகதிகள், பொங்கலுக்காக வெளியிலிருந்து வந்த வடையைச் சூடு காண்பித்து, பிளெயின் ரீயுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மதியம் பராமரித்த மரத்துப்போன கோழி வறுவலுக்கு, பழசு என்றாலும் வடை புதிதாக ருசித்தது.

சார்ளி கம்பவுண்டிலிருந்து வந்த சில பெண்கள் ஒவ்வொருவரும், தங்களது ஊரில் எவ்வாறு வடை செய்வார்கள் என்பதை ஆளுக்காள் வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

சம்பந்தமே இல்லாமல், இடையில் வந்து நுழைந்து இருந்து கொண்ட இரான் நாட்டுக் கிழவியொருத்தி, வடையை இரண்டு விரல்களால் பிய்த்து, வெளிச்சத்தில் தூக்கிப்பிடித்துப் பார்த்த பிறகு வாயில் போட்டுக்கொண்டிருந்தாள்.

ஒவ்வொரு தடவை தின்னும் போதும், அதன் சுவையை மூளைக்கு அனுப்பி, அனுமதி பெற்றுக் கொள்வது போலிருந்தது அவளது முகபாவனை. அவளது சுருக்கம் விழுந்த தாடை, வடையின் சுவைக்கு ஏற்றவாறு தாளம் போட்டுக்கொண்டு, ஆடி ஆடி அரைத்தது.

நீதன் தனக்கான பிளெயின் ரீயைப் போட்டுக்கொண்டு முகாமின் மத்தியிலுள்ள உதைபந்தாட்டத் திடலைச் சுற்றி மெதுவாக நடந்துகொண்டிருந்தான். பொங்கலுக்குச் சமைத்தவற்றை வைத்து அடுத்தநாளும் சாப்பிட்டது, அவனுக்கு மதியம் பசிக்கவில்லை.

நீண்ட பகலுறக்கத்துக்குப் பிறகு, மூன்று மணியளவில் எழுந்தவன், குளித்துவிட்டு வெளியில் வந்தான். குளிர்க்காற்றோடு நடைபோட்டபோது உடம்புக்கு மலர்ச்சியாக இருந்தது. இளஞ்சூடான பிளெயின் ரீ, நித்திரை அலுப்பை உடலில் ஒற்றி ஒற்றி எடுத்தது.

இரண்டு மணியானதும், வெளியிலிருந்து வழக்கம் போல விருந்தினர்கள் வரத் தொடங்கினார்கள். பார்க்க வந்திருக்கும் அகதிகளைத் தேடி, முகாம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஒவ்வோர் இடமாக ஓடத் தொடங்கினார்கள்.

எவ்வளவுதான் மனமெங்கும் துயரங்கள் கொப்பளித்தபடியிருந்தாலும் மாலை வேளைகளில் முகாம் சுற்றாடல் சற்று இளகிக் கிடக்கும்.

மதிய உணவை முடித்துவிட்டு, மர நிழல்களில் தத்தமது நண்பர்களோடு கூட்டம் கூட்டமாக இருந்து ஆண்கள் சீட்டாடுவார்கள். பெண்கள் சில வேளைகளில் கைவினைப் பொருட்கள் செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள். ஓரளவு இளவயதுடைய ஆண்கள், பந்து விளையாடுவார்கள்.

இன்னமும் சிறியவர்கள் பசும் புற்தரையில் ஓடியாடி குதூகலத்தில் கும்மியடிப்பார்கள். இவர்கள் அனைவரையும் கண்காணித்துக் கொண்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆங்காங்கே உலா வருவார்கள்.

சில உத்தியோகத்தர்கள் தாங்களும் அகதிகளுடன் சேர்ந்து பந்து விளையாடுவார்கள், சீட்டாடுவார்கள். முகாமுக்குள் எந்தப் பிரச்னையும் இல்லாமல், அகதிகள் மத்தியில் சுமுக நிலையைப் பேணுவதற்கு எதை எதையெல்லாம் செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் செய்து கொள்வதில், உத்தியோகத்தர்கள் மும்முரம் காட்டுவார்கள்.

விளையாடுபவர்களுக்கு அடிபட்டு விழுந்தாலோ அல்லது இடையில் முரண்டு பிடித்துக்கொண்டு சண்டையென்று வந்துவிட்டாலோ, உத்தியோகத்தர்கள் உடனடியாக விளையாட்டை நிறுத்தி, சம்பந்தப்பட்டவர்களை அங்கிருந்து வெளியேற்றுவார்கள். நிலைமை கட்டுக்கடங்காத சிக்கல் என்றால், மொத்தமாகவே எல்லோரையும் அவரவர் அறைக்குள் கலைத்துவிட்டு, இரும்புப் படலைகளை இழுத்துப் பூட்டி விடுவார்கள்.

தை மாசக் காற்றும் பின்னேர வெயிலும் சேர்ந்து ஜோடி போட்டு, முகாமுக்குள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன.




"நீதன் உனக்கு விருந்தினர்."

விருந்தினர் மண்டபத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களில் ஒருவரான அமண்டா, அடிக்குரலில் கூவி அழைத்தாள். சத்தமாக அழைத்ததில் அவளுக்கு மூச்சு வாங்கியது. கூவி முடித்த அவளது குரல், தாடைக்குள் ஆடியபடி தெரிந்தது.

மைதானத்தில் நடந்துகொண்டிருந்த நீதனுக்கு அதிர்ச்சியும் ஆச்சர்யமும் ஒருசேர முகத்தில் அறைந்தன. தனக்கு யார் இன்றைக்கு விருந்தினர் வரப்போகிறார்கள்? அரைவாசி குடித்த பிளாஸ்திக் குவளையை மைதானத்தின் மூலையிலிருந்த குப்பைத்தொட்டியில் மெதுவாக எறிந்தான். விருந்தினர் மண்டபத்தை நோக்கி வேகமாக நடந்தான்.

தமிழ் ஆட்க்ள் யாரும் அவனைத் தேடி வருவதில்லை. அவனும் யாரையும் சந்திப்பதற்கு விருப்பம் காட்டியதில்லை. பாதிரியார் ஒருவர் எல்லா அகதிகளுக்கும் பொதுவாக பிரார்த்தனை செய்வதற்கு வருவார், அவரும் இன்று வருவதற்கான எந்தச் சந்தர்ப்பமும் இல்லை.

பழைய பொங்கலை யாராவது முகாமில் அகதிகளுக்குக் கொண்டுவந்து தந்து புண்ணியம் தேடலாம் என்று வந்திருப்பார்களோ என்று எரிச்சலோடு யோசித்தபடி நடந்தான்.

கண்ணாடிக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த மாத்திரத்திலேயே, மஞ்சள் நிற சல்வாரில் சூரியகாந்தி தோட்டம் போல புன்னகைத்தபடி நின்றாள் ராதா.

நீதன் எதிர்பார்க்கவில்லை. அவள் தன்னைப் பார்க்க வருவாள் என்று மாத்திரமல்ல... அவள் அத்தனை அழகு என்பதையும்தான். வெளியில் போனதும் அவளது உடலிலும் மனதிலும் அப்படியொரு பரிபூரணம் நுழைந்திருந்தது. துயர்ரேகைகள் மறைந்த வெளிச்சமாகியிருந்தாள்.

"என்ன தெரியாத மாதிரிப் பாக்குறீங்கள்... உங்களைப் பாக்கத்தான் வந்தனான்."

தான் ஆச்சர்யப்பட்டதை அவள் கண்டுபிடித்துவிட்டாளோ என்ற பயத்தில், அதை இயன்ற அளவு மறைத்துக்கொண்டு, சிறு புன்னகையை உதடுகளில் மடித்து வைத்தான்.

"போன பிறகு, அப்படியே மறந்திருப்பாய் எண்டு நினைச்சன்."

எதேச்சையாக வாயில் வந்த எதையோ சொன்னானே தவிர, நீதனுக்குள் இன்னமும் ஆச்சர்யம் வற்றவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை மீதான காதல்

அந்தி பொழுதினிலே ஆதவன் மறைவு
நிகழும் அந்த நிமிடத்திலே
கடற்கரையோரம் தனில் தனிமையில்
வாடியிருக்கும் பொழுதினிலே
கடலும் வானமும் சங்கமிக்கும்
காட்சிதனை கண்ணுற்று
என்னை மறந்து பற்பல கனவுகளில்
திளைத்து திகைத்து இருந்தேன்
பரந்த வானத்திடை திரள்திரளாய்
குழுமியிருந்த மேகக்கூட்டங்கள் எனை கவர்ந்திழுத்தன
நீல திரையிடை நிதர்சனமாய் மெதுமெதுவாய்
தோன்றும் வெண்ணிலவும் என்னை ஈர்த்திழுத்தது
ஆதவனின் மறைவும் நிலவின் வருகையும்
புத்தம் புது கிளர்ச்சியை உண்டு பண்ணியது
சலசலத்து ஓடி வரும் அலைகள்
கால் தனை தழுவி வட்டமிட்டு முத்தமிட்டன
முத்த மழையில் நனையும் பொழுதினிலே
அலைகள் தெறித்து ஆனந்த குளிப்பாட்டின
இத்தனை இன்பங்களையும் இரசித்த
என் மனதுக்கு இயற்கை மீது வந்த
காதலை விட இயற்கையின் படைப்பு மீதான
காதல் கொள்ளை கொண்டு எனை ஊமையாக்கியது.

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

## இளமைக் கல்வி பள்ளியில்...

இலங்கைத் திருநாட்டில்
இலவசமாகப் பெற்றவையெல்லாம்- இன்று
இன்றியமையாதவையாகி விட்டனவே!
இயந்திர வேகத்தில் ஓடும் நமக்கு
இலவசக் கல்வி கூட
இணையத்தில் ஆரம்பித்து
இறுதியில் இல்லத்தில் அமைந்து விட்டதே!
இறைவனின் திருவிளையாடல் நமக்கு
இல்லத்தில் அமைதியையும்
இதயத்தில் அன்பையும்
இங்கிதமான உறவையும்
இன்பமான வாழ்வையும்
இயல்பான சூழலையும் தந்து
இயலாமைகளை நீக்கி
இமைகளைத் திறந்து
இளமைக் காலத்தில்
இலவசக் கல்வியைப் பள்ளியில் கற்க
இலங்கை நாட்டில் இந்நிலை மாற
இருகரம் கூப்பி இறைவனை வேண்டு மானிடா!

அருளப்பு ஞானப்பிரகாசம்
கரம்பொன், ஊர்காவற்றுறை.

## பாடம்

தாயிடம் பாசத்தை கற்றுக் கொண்டேன்
தந்தையிடம் பரிவைக்
கற்றுக் கொண்டேன்
நண்பனிடம் நட்பை கற்றுக் கொண்டேன்
காதலியிடம் தான் வாழ்க்கையை
கற்றுக் கொண்டேன்
எப்போது தெரியுமா?
காதலிக்கும் போது அல்ல...
காதலில் தோல்வி கண்ட போது...!

## வழியேதும் உண்டோ...?

நீரின் குணம் நிறத்தில் தெரியுமாம்
நெருப்பின் குணம் தகைப்பில் தெரியுமாம்
தேனின் தன்மை சுவையில் தெரியுமாம்
தேளின் தன்மை கொடுக்குகளில் புரியுமாம்
உறவின் வடிவம் பிரிவில் புரியும்
பொன்னின் தரம் உரைகல் கூறுமாம்
இவையெல்லாம் அறிந்தாலும் பொல்லாத மாந்தர்
உள்ளத்தின் தரமறிய வழியேதும் உண்டோ...!
இவ் உலகில்....

அற்புதராசா
திருகோணமலை.

## இலங்கை இப்போ

தான் தனது எனும் கொடு
தருக்குற்றார் தகைமையது
கூன் அரசாய் குடை
சாய்ந்து பேராசையாலே
டொலர் மீது போதை ஏற
சொல்லவொண்ணா
திருட்டால் தடாலடித்து
இலங்கை இப்போ
தடம் மாறி தவிக்கிறதே
என் செய்வோமே...


வைகதன் கொக்குவில்.

## வரிசையிலே...

பசிவயிறு பட்டினிச்சா
புசிப்பதற்கு அடுப்பெரியாது
போக்குவரத்திற்கும் எரி
பொருளும் கிடையாது
ஆக்கி உண்ண பொருட்கள்
அசுரவிலை ஏறி அத்தனைக்கும்
வரிசையெனில் ஆயுள் ஆங்கே
நெரிவு பட்டு நீத்தது தான் விதியா.

கார்வண்ணன் காவலூர்.

## மௌனத்தின் தேடல்- 568




## எகிறிய விலை

டொலரின் பாரத்தின்
வேகத்தில் எகிறியது
பொருட்களின் விலை
குறுகியது மக்கள் வாழ்க்கை.

## அருமை

பொருட்களின் அருமை
தெரிந்து
பொக்கிசம் போல்
பாதுகாத்து
ஒவ்வொன்றையும்
பார்த்துப் பார்த்து
செலவழிக்கும் - இவ்
வேளையும்
அருமையான நாட்களே...

ச.கஜுசிகா கொக்குவில்

## மௌனத்தின் தேடல்- 569



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை / ஏனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## தாயை தண்டித்தால்

நிறை கோயில் நீதி இல்லை
நெம்புகோலோ சரிந்த நிலை
குறை வயிறை நிரப்புதற்கும்
குழந்தைகட்கும் உணவு இல்லை
இயற்கை தந்த ஈரப்பலாக்காய்
பிடுங்கி நோய்க் குழந்தைக்கு
ஊட்டுதற்கும் தாயை தண்டித்தால்
அயல் நாடும் எமக்கு உதவுமாமோ

வானிசன்
நல்லூர்.


## மனிதா விழித்திடு

உலகில்
ஒருவருக்கொருவர்
கொண்ட
இன மத குல பேதத்தாலே
பிரிந்து நிற்கும்
மனிதர்களை பைக்குள்
இருக்கும் இந்த
இரும்பு மனிதா
இப்படிக் கம்பின் ஒருபுறம்
ஒன்றாய் வைத்து
சர்வாதிகாரத்தோடு
அடக்கியாள
முயல்கிறார் மனிதா நீ
விழித்திடாயோ?

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் தொழில் திறன் அதிசயங்கள் பகுதி - 1



ஸ்கொட்லாந்தில் உள்ள மணிப்பாறை கலங்கரை விளக்கம், பசுபிக் இருப்பு பாதை, அமெரிக்காவிலுள்ள ஹூவர் அணை, லண்டன் கழிவு நீரகற்றும் அமைப்பு, எஸ்.எஸ்.கிழக்கு கப்பல், பனாமா கால்வாய், புரூக்ளின் பாலம் ஆகியவற்றை உலகின் ஏழு தொழில் திறன் அதிசயங்கள் என அழைக்கின்றனர். பவுல் பிரையர்ஸ் என்னும் ஆங்கில எழுத்தாளர் மற்றும் ஆவணப்பட இயக்குனர் 2003 ஆம் ஆண்டு பிபிசி தொலைக் காட்சிக்காக எடுத்த 50 நிமிட ஆவணப்படமொன்றில் இந்த ஏழு இடங்களைக் குறித்து அழகாக படமாக்கியிருக்கிறார். மிகச்சிறந்த ஒளிப்பதிவு, நேர்த்தியாக படத்தொகுப்புடன் அமைந்த இந்த ஆவணப் படம் லண்டனில் உள்ள பிரபல பாஃப்டா (பிரிட்டிஷ் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிக்கான விருதுகள் அமைப்பு) விருதுகளுக்கான பரிந்துரைப் பட்டியலில் இடம் பெற்றது.

பொதுவாக இந்தப் படத்தில் பிரையர் உலகளாவிய பார்வையுடன் அணுகியதாகத் தெரியவில்லை. அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து என்ற குறுகிய வட்டத்துக்குள் சுழன்றதாகவே கருத முடிகிறது. வரலாற்றில் பதிவுகள் என்பது மிக முக்கியம். ஒரு செய்தியை காலம் தாண்டியும் செல்லுமாறு பதிவு செய்வது அதனைப் பரவலாக்குவது ஆகியவற்றில் ஆங்கிலேயர்கள் கில்லாடிகள். கடுகளவு செய்தியையும் கடலளவு பாயச் செய்துவிடுவார்கள். அதில் ஆசிரியர்கள், குறிப்பாக நாம் மிகவும் பின்தங்கித்தான் இருக்கிறோம். மனிதகுல சாதனைகள் என்றால் அதனை நம்முடையது எனக் கருதும் மனப்பாங்குடன் இதை அணுகுவதுதான் மிகச்சரியானதாக இருக்கமுடியும்.

## மணிப்பாறை கலங்கரை விளக்கம்

ஸ்கொட்லாந்தில் ஆங்கஸ் என்னும் கடற்கரையில் மணற் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் கடலுக்குள்ளே அமைக்கப் பட்டிருக்கிறது மணிப்பாறை கலங்கரை விளக்கம். ஆங்கிலத்தில் Bell Rock Light House என்று அழைக்கப்படும் இந்த கலங்கரை விளக்கம் 1807 ஆம் ஆண்டு கட்டத்தொடங்கப் பட்டு 1810 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

இந்த கலங்கரை விளக்கத்துக்கு இஞ்ச்கேப் லைட் ஹவுஸ் என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஸ்காட்டிஷ் மொழியில் இஞ்ச்கேப் என்பதற்கு தேனி வளர்ப்புக்கூடு என்று பொருள். தேன் சேகரிப்புக்காக அத்தொழிலில் ஈடுபடுபவர்கள் மரத்தாலான தேன் கூடு ஒன்றை வைத்திருப்பார்கள். பார்ப்பதற்கு அந்தக் கூடு போலவே தோற்றமளிக்கும் பாறை மீது அந்தக் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்ததால் அப்படி ஒரு பெயர்.

இந்தக் கலங்கரை விளக்கத்தை நிர்மாணிப்பதற்கு முன் அந்த பாறையின் மீது மோதி 70 இற்கும் மேற்பட்ட கப்பல்கள் காணாமல் போயிருக்கின்றன. 1700 களின் இறுதி ஆண்டுகளில் இப்படி அடிக்கடி கப்பல் காணாமல் போவதைத் தடுக்க அப்போதைய அபாட் அல்போர்த் சாம்ராஜ்யத்தின் மன்னன் ஒருவன் ஆங்கஸ் கடற்கரையை நோக்கி வருகின்ற கப்பலுக்கு எச்சரிக்கை செய்வதற்காக ஒரு மணியை அங்கு நிறுவினான்.

(தொடரும்...)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2676

### நேகா

பொண்ணுங்க கிட்ட நீ கோவமா இருக்கியானு கேட்டா மூணு பதில் தான் வரும்



ஆமா (அப்படினா ஆமா)
இல்லை (அப்படினாலும் ஆமா)
தெரியல (கண்டிப்பா ஆமா)

### குமரன்

ஏன்டா முட்டா பய மகனே அறிவிருக்கா இல்லையா...
ஏன்டா அம்மா இப்படி திட்டுறாளே ஒனக்கு ரோசமே இல்லையா...
நல்லா யோசிச்சு பாருங்க அம்மா என்னைய மட்டுமா திட்டினாங்க.




"முட்டா பய மகனே"

### அருண்

என்னிடம் வரும் போது அழுது கொண்டே தான் வருகிறார்கள்



என்னை விட்டு பிரிந்த பிறகும் என்னுடைய நினைவுகளால் அழுதுகொண்டே இருக்கிறார்கள்...!!

### மலர்



திருமணம் முடிப்பவர்களின் எண்ணிக்கை 85 சதவீதத்தால் குறைவடைந்தது. திருமண பதிவாளர்கள் சங்கம் தெரிவிப்பு



இனி எங்க அதெல்லாம்! விடிஞ்சா பெட்ரோல் மண்ணெண்ணெய் தேடவே சரியா இருக்கு.

### தினேஸ்

மூக்கை மட்டும் மூடும் வகையிலான சிறியவகை முகக் கவசங்களை அறிமுகப்படுத்தியுள்ளது தென்கொரிய நிறுவனம்: இதற்கு கோஸ்க் என பெயரிடப்பட்டுள்ளது.




### பிரதீபா

கடைசி பெஞ்ச் மாணவர்களை முன்ன வந்து உட்காருங்கள் என ஆசிரியர் சொல்லும்போது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிந்தனைக்கு...

**இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?**

பயப்பட வேண்டிய விடயங்களுக்கு பயம் இன்றி இருந்து கொள்வது ஆபத்தானது என்றும் அதே சமயம் பயம் கொள்ளத் தேவையற்ற விடயங்களுக்கு பயந்து கொண்டே இருப்பதும் ஆபத்தானது என்றும் நம்முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் அன்றாட வாழ்வில் பயம் கொள்ளத் தேவையற்ற பலவற்றிற்கு பயந்து வாழ்ந்து கொண்



டிருக்கின்றோம். பால் குடிக்க பயம், தயிர் சாப்பிடப் பயம், தவசிமுருங்கை சாப்பிடப்பயம், இரவிலே இலை வகை உண்ணப் பயம், சில உயிர்க்காப்பு மருந்துகளை உள்ளெடுக்கப் பயம், இறால் சாப்பிடப் பயம், அகத்தி மரத்தை வீட்டில் வளர்க்கப் பயம், முட்டை சாப்பிடப் பயம், முட்டு வருத்தத்தால் கஷ்டப் படினும் பம் பாவிக்கப் பயம் இவ்வாறாக பயப்படத் தேவை அற்ற பலவற்றிக்கு நாம் பயந்து பயந்து வாழ்வதன் காரணம் என்ன?

அதேவேளை பயப்பட வேண்டிய பலவற்றிக்கு பயம் இன்றி வாழ்ந்து பல ஆபத்துக்களை தேடிக் கொள்கிறோமே? இதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது? உடல் பருத்திருந்தும் உல்லாசமாய் உலாவி வருகிறோம். சந்தோசமாக சோடா குடிக்கிறோம். எதுவித பயமுமின்றி உடற்பயிற்சி செய்யாதிருக்கிறோம்.

உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று விளக்கமும் கொடுக்கின்றோம். தினமும் தொலைக் காட்சிக்கு முன்னால் மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்து மகிழ்கிறோம். இரசாயனம் சேர்க்கப்பட்ட மென்பானங்களை அருந்து வதில் பெருமை கொள்கிறோம். சினிமா கதா நாயகர்கள் பாணியில் குடித்து புகைத்து கும்மாளம் அடித்து கதா நாயகர்களாய் உலாவருகிறோம். வாகனம் ஓடுவதில் "திறமையை" காட்ட முயல்கிறோம். இவ்வாறாக பயம் கொள்ள வேண் டிய பல விடயங்களை பயமின்றிச் செய்யத் துணிந்ததன் காரணம் என்ன?

**இந்த இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?**


**தெளிவு பெறுவோம்**

கஷ்டங்கள் வரும் பொழுது கடவுளின் ஞாபகம் சேர்ந்து வருகிறது. கவலைகளும் கஷ்டங்களும் தொடர்ந்தால் கடவுளிடம் மனமுருகி வேண்டியவையும் கிடையாது போனால் கோபம் கூட வருகிறது.

கேட்டும் கிடைக்காத போது கடவுள் நம்பிக்கையும் கேள்விக் குறி ஆகிவிடுகிறது. கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கும் எம்மைக் காப்பதற்கும் மட்டும் தான் கடவுள் இருக்கிறாரா?சரி கேட்பவற்றை எல்லாம் கொடுக்கும் கடவுள் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.

நாம் எல்லாவற்றையும் கேட்க எல்லாமே கிடைக்குமானால் இன்னொருவனுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போகாதா? இது நியாயமாகுமா? இதையும் மீறி எல்லோருக்கும் எல்லாமே கிடைத்து விடின் பூவுலகம் எவ்வாறு இயங்க முடியும். ஒன்றின் இழப்பிலே இன்னொன்று கிடைப்பதும் தோல்விகளும் வெற்றிகளும் மாறி மாறி ஏற்படுவதும் எதிர்பார்ப்பவற்றிலே சில கிடைக்காமல் போவதும் எதிர்பாராமலேயே சில கிடைக்கப் பெறுவதும் சர்வநிச்சயமானது.

கடவுளிடம் எம்மை சரியான பாதையில் வழிநடத்துமாறு கேட்போம். எமது மனோபலத்தையும் எதையும் தாங்கி சமாளிக்கும் மன உறுதியையும் வளர்த்து விடக் கேட் போம். எமது சந்தோசங்களையும் முன்னேற்றங்களையும் கடவுளிடம் பகிர்ந்து கொள்வோம். எமது கவலைகளையும் பிரச்சினைகளையும் அவரிடம் முறையிட்டு ஆறுதலும் தெளிவும் பெறுவோம்.



எல்லாம் வல்ல இறைவன் உலகை சரியான பாதையில் வழிநடத்துவார்.

**பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்களா?**

வளரும் குழந்தைகளின் மனதிலே பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்கள் என்ற மனப்பதிவே இருந்து கொண்டிருக்கும். தம்மை எந்தக் கஷ்டத்திலிருந்தும் பாதுகாப்பார்கள், தாம் விரும்புவதை செய்து தருவார்கள், சரியான பாதையிலே நடத்துவார்கள், நிலாவைக் கூடக் கையில் பிடிக்கும் வல்லமை உள்ளவர்கள், அவர்கள் செய்வதெல்லாம் நல்ல விடயங்களாகத்தான் இருக்கும் என்றெல்லாம் நம்பிக்கொள்வார்கள்.

இவ்வாறான ஒரு நிலையில் இந்தக் குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் சின்னத்தனமாக நடந்து கொள்ளும் பொழுதும் தம்மிடையே சண்டை செய்யும் பொழுதும், அழும் பொழுதும், தமது இயலாமையை வெளிப்படுத்தும் பொழுதும், தீய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுதும் குழந்தைகளின் மன ஓட்டம் குழப்பமடையும்.

இவர்களால் தம்மை பாதுகாக்க முடியுமா? என்ற பாதுகாப்பற்ற தன்மை தோன்றும். அந்த சிறிய மனங்களிலே தீய விடயங்கள் ஆழப்பதியும். இது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பெரும் பாதகமாக அமையும். எனவே சிறுவர் முன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் பற்றி சிந்திப்பது பயன்தரும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர் பாடசாலை மாணவர்கள்


(கொழும்பு)

**நாட்டில் இதுவரை பாதிக்கப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 25 சதவீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என தேசிய டெங்கு ஒழிப்பு மையம் தெரிவித்துள்ளது.**

பாடசாலை மாணவர்களுக்கு காய்ச்சல் மற்றும் உடல் நோவு காணப்படுமாயின் உடனடியாக குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அதன் பணிப்பாளர் விசேட மருத்துவர் சுதத் சமரவீர அறிவுறுத்தியுள்ளார்.

தொற்று நோயியல் விஞ்ஞான பிரிவின் தரவுகளின் அடிப்படையில் ஜுலை மாதத்தில் 7 ஆயிரத்து 26 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இந்த மாதத்தின் இது



வரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 76 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த எண்ணிக்கையானது இந்த வருடத்தில் பதிவாகிய அதிக எண்ணிக்கையாகும்.

நாளாந்தம் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் பின்னனியில் தமது வீடுகள் மற்றும் அதனை சூழவுள்ள பிரதேங்களையும் டெங்கு நுளம்புகள் பெருகா வண்ணம் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பது பொதுமக்களின் பொறுப்பாகும் என சுகாதாரப்பிரிவு வலியுறுத்தியுள்ளது. (நி)

வடமாநிலம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் காணி. வீடு. வியாபாரம் போன்றவற்றை வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ எமது சேவையை நாடவும் (C-1759)
GLOBAL Property Management Services
071 072 9870

வீடு வாடகைக்கு தேவை
யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.
077 745 1625

காணி விற்பனைக்கு
58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்)
தொலைபேசி: 077 977 3732
(C-4677)





# ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் அம்பாள் மஹோற்சவம் தேர்த்திருவிழா சிவமணம் எங்கும் வீசுதல்

"நீற்றொளி யெங்கணு நிறைந்து தோன்றலின்
ஏற்றுயர் கொடியினார்க் எடுத்த மந்திரம்
நாற்றிசை யடியவர் நாவிற் புல்லலின்
வீற்றுயர் சிவமணம் வீசி நின்றதே"

ஈழத்து சிதம்பர புராணம்

ஆனி மாதம் ஆனந்த மாதம் மாணிக்கவாசகர் இறைவனுடன் இரண்டறக் கலந்த தினம். ஆனி மகம் இம்முறை சக்தி பீடங்களான நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பகல் மஹோற்சவத்தில் மாணிக்கவாசகர் பெருமான் திருவாசகத்துடன் பல்லக்கில் அம்பாளுடன் உள்வீதி வந்த அற்புதமான காட்சி அடியேனும் கலந்தபேறு ஒரு திருவருள் 'ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய'

ஆனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் திருக்கேதீஸ்வர கும்பாபிஷேகம் திருக்கேதீஸ்வரம் ஒரு தேன் பொந்து, அக்காணியை முன்னிருந்த ஆலயம் போன்று அமைக்க வேண்டும் என நாவலர் பெருமான் கண்ட கனவை நனவாக்க, சைவ சீலர் பசுபதிச் செட்டியார், சைவ பெரியார் சு.சிவபாதசுந்தரம், சேர்.கந்தையா வைத்தியநாதன் போன்றோர் அயராது உழைத்து அவர்களின் வழியில் வந்த திருப்பணிச் சபையின் சிவத் தொண்டில் இந்திய அரசு உதவியுடன் கருங்கல் ஆலயமாக அமைந்தது உலக மக்கள் செய்த புண்ணியமாகும் 'ஓம் நமசிவாய'

எமது ஊர் சிவாச்சாரியர் இந்திய சிவாச்சாரியர் ஆகிய விசேட குருக்களாருடன் ஓதுவார் மூர்த்திகளுடனும் ஆனி மாத உத்தரத்தில் நிறைவாகிய கும்பாபிஷேகமும், நாவலர் பெருமானின் சிலை திறப்பும் நிறைவாகியது திருக்கேதீச்சரத்தின் திருவருளாகும்.
'ஓம் நமசிவாய'

இறையருளாற்றலை கும்பிக்கும் இடமே யாகசாலை. சிவாச்சாரியர்கள் தமது வழிபாட்டுத் திறனால், ஆகாஷத்தில் இருந்து காற்று வழியாக மந்திர உற்சாடலால் திருவருளை இறக்கி, யாகசாலை குண்டத்தில் உயர்ந்த உகந்த திரவியங்களை அக்கினியில் குவித்து குண்ட நெருப்பில் ஆகுதி செய்து அங்கிருந்து கும்பத்தில் உள்ள நீரில் இறையாற்றலை குவித்து பின் அந்தக் கும்ப நீரால் கும்பித்து செய்யும் கும்பாபிஷேகம் கண்டார் குவலயத்துயர்ந்து வாழ்வார்கள். (தொலைக்காட்சியில் தரிசித்தவர்களும் பேரின்ப பெருவாழ்வு பெறுவார்கள்) 'ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய'

இந்தியாவில் அனைத்து ஆலயத் திருமுறை ஓதுவார் மூர்த்திகள் (சிவாச்சாரியர்களுக்கு ஓதுவார் அடுத்தவர்கள்) ஓதுவார்கள் பன்னிரெண்டு திருமுறைகளையும் பன்னிரெண்டு ஓதுவார். ஏக காலத்தில் ஓதியதுடன் மற்றும் பதினெட்டு ஓதுவார்கள் யாகசாலையில் இறைவனுக்கு அருட்சணையாக நல்ல பண்புடன் இசையுடன் தாளத்துடன் சமர்ப்பணம் செய்தமை அடியார்களது ஐம்புலன்கள் பூராகவும் நுகர்ந்து தங்களையும் எங்களையும் சிவமாக்கியமை இன்றும் என்றும் சிவத்தேன் இனிக்கும் எல்லோரது வாழ்வு சைவநெறியில் அறநெறியில் மலர 'ஓம் நமசிவாய'

இங்கு அதிகமான யாத்திரிகர்கள் வருவதால் ஆலயம் சுற்றி வர பதினைந்து மடங்கள் இருந்து இன்று ஏழு மடங்கள் சிறப்பாக இயங்குவது ஒரு சிறப்பு 'ஓம் நமசிவாய'

ஆனி மாத சிவதரிசனம் ஆடிமாதம் ஆடிப்பூர தினத்தை ஒட்டி அம்பாள் தரிசனம் காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் அம்பாள் மஹோற்சவம் நடைபெறுவது சிதம்பரத்தான் அருள்.

"ஆறிலாக் காரைநாட்டி
வழுக்காறு மில்லைச் சைவ
ஏறினான் நல்லை வந்த
நாவல னெடுத்து வாழ்ந்த
ஈறிலா வொழுகலாறு
வலமிட மெங்கு மோடி
மாறிலா வவ்வூர் மாந்தர்
மணற்கடற் படியமன்றே!"

(ஈழத்துச் சிதம்பர புராணம்)

பல வருடங்களிற்கு முன் அம்பலவி முருகர், ஆண்டி முருகர் ஆரம்ப காலத்திலே திருமுறைகளை நெஞ்சத்தை உருக்கி கனிவிக்கும் திருவாசகத்தேனில் மிகுந்த ஈடுபாட்டில் இருந்தாலும் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வரும் அடியவர்களுக்கு...

'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று' (திருக்குறள் 83)

அம்பலவி முருகர் நாள்தோறும் விருந்தினரை வரவேற்று உபசாரம் செய்பவர் எனவும் இந்தியா சிதம்பரத்தில் 31 மடங்களின் சேவை போல் இங்கும் அன்னதானம் செய்தார் எனவும் திருவாசகம் தனது திருக்கரங்களால் ஓலையில் வரைந்ததாகவும் அக்கால சிவப்பொலிவு விளங்கியதாகவும் ஈழத்துச் சிதம்பர புராணம் உரைக்கின்றது. அந்த அத்திவாரமே பிற்காலத்தில் (95 வருடங்களுக்கு முன்) மாணிக்கவாசகர் பெயரால் அன்னதானப் பணியை பஞ்ச காலத்திலும் சலிப்படையாமல் நடத்தியமை அற்புதக் கூத்தன் திருவருள் என்றால் மிகையாகாது 'ஓம் நமசிவாய'

உலகில் நிலவிய கொரோனாவாலும் சில காரணங்களாலும் அன்னதானப் பணி தடைப்பட்டிருப்பது எனினும் மீள இப்பணி தொடர எம்பெருமானையும் பெருமாட்டியையும் பிரார்த்திப்போம் 'ஓம் நமசிவாய'

பங்குனி ஐந்து, தேர் திருவீதி வந்து இருப்பிடம் அடைய தாமதமானதால், அடியார்களின் சோர்வு நீங்க, சிவ அடியார்களின் அன்பர் சிவஞானம் தாகத்திற்கு குளிர்பானமும் நீரும் தாராளமாக பிரசாதம் வழங்கியமை இறைவன் திருவருள் 'ஓம் நமசிவாய'

நாம் நம் நாட்டுத் துன்பம் நீங்க அபிராமி அந்தாதி, கந்தர் அநுபூதி, சிவபுராணம் மாலை 6 மணியளவில் ஓதுவோம் 'ஓம் நமசிவாய'

"பத்திமையும் பரிசுமிலா பசுபாசம் அறுத்தருளி பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே, சித்தம் எனும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லை கண்டேனே"

(திருவாசகம்-கண்டபத்து)

"அடியேன் ஈழத்து தில்லைக்கூத்தன் கண்டேன் பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பனாக்கினாய் உரியனாக்கினாய்" ( திருவாசகம்- ஆனந்தகீதம்)

முத்தன் எங்கள் பிரான் என்று வானோர்
தொழநின்ற திமில்ஏறு உடையானை
அத்தன் எந்தை பிரான் எம்பிரா்னை
ஈழத்து சிதம்பரனை மறக்கலும் ஆமே!

பத்தா பக்தர் பலர் போற்றும்
பரமா பழையனூர் மேய
அத்தா திண்ணபுரம் கூத்தா உன்
அடியார்க்கு அடியேன் ஆவேன்.

(C-4674)

க.கு.க.சிவபாலன்(K.K.K)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பூர நாளில் துர்க்காதேவி திருத்தேரில் பவனி

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஶ்ரீதுர்க்கா தேவி ஆலய வருடாந்த ஆடிப் பூர விசேட பூசை வழிபாடுகள் நாளை திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற உள்ளது.

காலை 9 மணிக்கு அபிஷேக வழிபாடுகள் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்குப் பூசை, முற்பகல் 11.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசைகளும் தொடர்ந்து துர்க்கை அம்பாள் அழகிய சித்திரத் தேரில் உள்வீதி வலம் வரும் திருக் காட்சியும் இடம்பெறும் என மேற்படி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (4-18)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1991 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் பொன்னகவை ஒன்றுகூடலும், காங்கேசன் துறை வீதியில் அமைக்கப்பட்ட புதிய நுழைவாயில் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

(படம்:- ரவிசாந்)

# காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை - பொதுப்பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தும் இடங்களை இன்னமும் ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, துறைமுக அதிகாரசபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளை அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்த குற்றச்சாட்டு அவர்கள் மீது சுமத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் பாதுகாப்பு கமரா காட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள வீடியோ காட்சிகள் மூலம் வளாகத்தை ஆக்கிரமித்துள்ளவர்களை அடையாளம் காணும் செயற்பாடு முன்னெடுக்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போராட்டம் தொடர்பில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் தொலைபேசி உரையாடல்கள் மற்றும் வங்கி கணக்குகளை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பொலிஸ், குற்றப் புலனாய்வு திணைக்களம் உள்ளிட்ட பல குழுக்களினால் ஜனாதிபதி செயலகம் உட்பட அடையாளம் காணப்பட்ட இடங்களில் தற்போதுவிசாரணைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (நி-4)

# அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சி

## மத்தியவங்கி தகவல்

(கொழும்பு)

இலங்கையின் உத்தியோகபூர்வ அந்நிய செலாவணிக் கையிருப்பு இந்த வருடம் ஜூன் இறுதிக்குள் 1.85 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் கையிருப்பு 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 7.6 பில்லியன் டொலர்களாக இருந்தது. எனினும் அன்றில் இருந்து அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாக கையிருப்பு வீழ்ச்சியடைந்து வருகிறது.

முன்னதாக கையிருப்பு 2020 இறுதிக்குள் 5.7 பில்லியன் டொலர்களாகக் குறைந்துள்ளது.

மத்திய வங்கியின் புள்ளி விவரங்களின்படி, கையிருப்பு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 3.1 பில்லியன் டொலர்களாகவும், 2022 மார்ச் இறுதியில் 1.9 பில்லியன் டொலர்களாகவும் குறைந்துள்ளது.

கையிருப்பு குறைவினால் எரிபொருள் மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதில் இலங்கை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. (நி-4)

# ரஞ்சனுக்கு விரைவில் விடுதலை

## சஜித் நம்பிக்கை



(கொழும்பு)

மனிதாபிமானம் மிக்க அரசியல்வாதியான ரஞ்சன் ராமநாயக்க வெகு விரைவில் முழுமையாக விடுதலை பெறுவார் என்று தான் நம்புவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் மேலும் குறிப்பிடுகையில்,

வெகுவிரைவில் தனக்கு முழுமையான விடுதலை கிடைக்கும் என்ற சாதகமான எதிர்பார்ப்புடன் ரஞ்சன் ராமநாயக்க காத்திருக்கின்றார்.

அவருக்கு முழுமையான விடுதலை கிடைக்க வேண்டும் என்பதே, என்னுடையதும் முழு இலங்கை மக்களதும் எதிர்பார்ப்பாகும். இதற்காக நாம் பிரார்த்திக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மீனவர்கள் பணிக்கு திரும்பினர்

(இராமேஸ்வரம்)



இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 700 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 21 ஆம் திகதி மீன்பிடிக்க கடலுக்கு சென்று தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதிக்கு ரோந்து வந்த இலங்கை கடற்படை ஒரு விசைப்படகையும் அதிலிருந்த ஆறு மீனவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்தது.

இதையடுத்து இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 22 ஆம் திகதி அவசர ஆலோசனை கூட்டம் நடத்தி காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்தனர்.

இதையடுத்து கடந்த 8 நாட்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் தற்போது மீனவர்களின் வாழ்வாதாரம் கருதி தங்களுடைய வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்று நேற்று சனிக்கிழமை காலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

இந் நிலையில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட ஆறு மீனவர்களை விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-285)

# பதுக்கிவைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா கொந்தக்காரன் குளத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல் ஓமந்தை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பதுக்கி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதுடன், ஒருவரையும் கைது செய்து ஓமந்தை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (4-299)

# கறுப்பு ஜூலை நினைவேந்தல் இன்று

(குப்பிழான்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும், மக்கள் போராட்ட இயக்கமும் இணைந்து முன்னெடுக்கும் 39 ஆவது ஆண்டு கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக தமிழ், சிங்கள, சமூக, அரசியல் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு நினைவுரைகள் ஆற்றவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன. அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமர் பக்கம் போன விபூடனனும் சீனாவை அண்டிய இலங்கையும்

இராஜதந்திரம் என்றால் நெருக்கடி நிறைந்த நேரத்தில் எடுக்கின்ற மதிநுட்பமான முடிவு என்று பொருள் கொள்ளலாம்.

மாறாக, எடுக்கின்ற தீர்மானம் நிலைமையை மேலும் மோசமாக்குமாயின், அதனை இராஜதந்திரம் என்று யார் கருதினாலும் அதை விட்ட அறியாமை வேறுஎதுவுமாக இருக்க முடியாது.

இங்கு இராஜதந்திரம் என்பதை விளக்குவதற்கு விபூடனன் நல்லதோர் உதாரணம்.

ஆம், இராம – இராவண யுத்தம் ஆரம்பமாகப் போகிறது.

யார் அறிவுரை கூறினாலும் அதனை செவிமடுக்குமளவில் இராவணன் இருக்கவில்லை.

அண்ணா! கற்புடைத் தேவியை விட்டுவிடு என்று கும்பகர்ணன் கெஞ்சுகின்றான். அதற்கும் இராவணன் இசைந்திலன்.

நான் போர்க்களம் சென்று என் உயிர் பிரிந்த செய்தியைக் கேட்டபின்பேனும் சீதையை விட்டுவிடு என்று கும்பகர்ணன் கூறிய வார்த்தை கல் நெஞ்சையும் கரைக்கவல்லது.

ஆனால் சீதை மீது மோகம் கொண்ட இராவணனுக்கு கும்பகர்ணனின் வார்த்தைகள் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதாகவே இருந்தது.

இந்த நிலையில் இராம – இராவண யுத்தம் மூண்டால் இராவண சேனை அழியும். அவன் பரம்பரை மாளும்.

அழகாபுரியான இலங்கை பற்றி எரியும். நாட்டை இராமர் சேனை கைப்பற்றும்.

அதன் பின்னர் இலங்கை பற்றிய தீர்மானங்கள் அனைத்தும் இராம தரப்புக்கே உரியதாகும்.

இந்த நேரத்தில்தான் விபூடனன் இராமர் பக்கம் சேர்ந்து இலங்கை தேசத்தைக் காப்பாற்ற முற்படுகின்றான்.

விபூடனனின் இந்த வியூகம் அவன் மட்டில் எடுக்கப்பட்டதன்று.

மாறாக, தன் அண்ணன் இராவணனுக்காக போர்க்களம் சென்று உயிரைத் தியாகம் செய்த தம்பி கும்பகர்ணனின் அறிவுரைப்படி விபூடனன் இராமர் பக்கம் சேர்ந்தான்.

எதிரியின் பக்கம் விபூடனன் சென்றமை குறித்து பல்வகையான விமர்சனங்கள் இருந்தாலும் அவ்வாறானதொரு முடிவை விபூடனன் எடுக்காதிருந்தால், இலங்கையை சுக்கிரீவன் தரப்போ அன்றி சடாயுவின் பரம்பரையோ ஆண்டிருக்கலாம்.

ஆனால் அவ்வாறானதொரு ஆபத்து ஏற்படாமல் தடுக்கும்வகையில் விபூடனனின் முடிவு மிக உன்னத இராஜதந்திரமாக இருந்தது.

ஆனால் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்காக சீனாவை தன் நட்பாக்கியது.

அதாவது தன் சகோதரர்களை – இலங்கை மாதாவின் பிள்ளைகளை அழிப்பதற்காகச் சீனாவுடன் கூடா நட்புக் கொண்டது.

இங்குதான் தூரநோக்கற்ற – வஞ்சகத்தனமான முடிவை இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள் மிக உயர்ந்த இராஜதந்திரம் எனக் கருதி எடுக்கின்றனர்.

அதன்விளைவுதான் இலங்கையின் இன்றைய பரிதாப நிலையாகும்.

# ரணில் சர்வகட்சி அமைக்க விரும்பினால் நாமும் அதனை வரவேற்போம்

## பொருளாதார வீழ்ச்சிக்கு அதுவே வழி – சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி ஆட்சியை அமைக்க விரும்புவதாக வந்தால் அதனை நாம் வரவேற்போம்.

பொருளாதார சிக்கலில் இருந்து விடுபட அதுதான் ஒரே வழி. ஆனால் அது உண்மைத்தன்மையான சர்வகட்சி ஆட்சியாக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று கட்சி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு தொடர்பிலும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

எமது கட்சியின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே நிலைப்பாட்டில் வந்து எந்தவித குழப்ப முமின்றி எடுக்கப்பட்ட தீர்மானம். ராஜபக்ஷ குடும்பத்தை அரசியலில் இருந்து அகற்ற வேண்டும் என்ற மக்கள் போராட்டம் நடைபெறுகிறது. அது உலகத்திலேயே சிறப்பாக நடைபெற்ற வன்முறையற்ற ஒரு ஆர்ப்பாட்டம். அதன் பிரதி பலனாக ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் அவர்கள் சற்று ஒதுங்கியிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நியமித்துள்ளார்கள்.

ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ அவர்களின் நிகழ்ச்சி நிரலை தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்துபவர். ராஜபக்ஷ அவர்களின் ஆட்சியின் நீட்சியாக தான் அதனை பார்க்க முடியும். அதனை தடுப்பதாக இருந்தால் டலஸ் அழகப்பெருமாவுக்கு தான் வாக்களிக்க முடியும். மாற்று தெரிவு எதுவும் இருக்கவில்லை என்றார். (ம-7,250)

## எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் அமைதியின்மை

### நாடளாவிய ரீதியில் 13 பேர் கைது

நாடு முழுவதும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மதியம் முதல் நேற்று காலை வரை குறித்த 13 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹூங்கம. யக்கல, பாதுக்க, கல்கமுவ, காத்தான்குடி, இமதுவ, கரன்தெனிய, கட்டான மற்றும் பொலன்னறுவை உள்ளிட்ட பகுதிகளிலேயே இவ்வாறு கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (ம-7)

## பண்டாரகம சிபெட்கோ எரிபொருள் நிலையத்தில்

### தீ விபத்து; ஒருவர் காயம்

பண்டாரகம சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களின் ஓய்வு அறையில் தீ பரவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பம்புகள் நிறுவப்பட்ட இடத்திற்கு அருகிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. உடனடியாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர்கள் மற்றும் வரிசையில் இருந்தவர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஹொரணை மாநகர சபையின் தீயணைப்புத் துறை அதிகாரிகள் வந்து தீயை முற்றாகக் கட்டுப் படுத்தினர்.

தீயை அணைக்கும் முயற்சியில் பௌசர் சாரதி ஒருவரின் கையில் காயம் ஏற்பட்டது.

காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மின் கசிவு காரணமாக தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (ம-7)

## ஊரெழு பர்வதவர்த்தனி அம்பாளுக்கு இன்று தேர்

யாழ். ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தனி மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற உள்ளது.

இவ்வாலய மஹோற்சவத்தில் நேற்றுச் சனிக் கிழமை இரவு 7 மணிக்கு [illegible] திருவிழா இடம்பெற்றதுடன் நாளை திங்கட்கிழமை மேற்படி ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள புஷ்கரணி தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவமும், அன்றைய தினம் இரவு 7 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் [illegible] (ம-7,18)

## விவாகரத்து கோரிய மனைவியை கடத்திய கணவன் கைதாகி மறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரம் பிரதேசத்தில் விவாகரத்து கோரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து விட்டு பெற்றோருடன் வாழ்ந்து வரும் தனது மனைவியை வீடு புகுந்து கடத்திச் சென்ற குறித்த பெண்ணின் கணவர் அவருடைய பெற்றோர் உட்பட கைது செய்யப்பட்ட 3 பேரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெண் அதே பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரை கடந்த 6 மாதத்திற்கு முன்னர் திருமணம் முடித்துள்ளார்.

இந்த நிலையில் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கணவனைவிட்டு பிரிந்து சென்று தனது பெற்றோருடன் வாழ்ந்து வருகின்ற அவர், கணவனிடம் இருந்து விவாகரத்து கோரி அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ தினமான நேற்று முன்தினம் காலையில் குறித்த பெண்ணின் வீட்டிற்கு வந்த கணவர் அவரது பெற்றோர் உட்பட 3 பேர் பெண்ணின் தாயார் மற்றும் அவரது இரு சகோதரிகள்ள தாக்கி விட்டு பெண்ணை கடத்திக் கொண்டு சென்று தனது வீட்டின் அறையில் பூட்டி வைத்துள்ளனர்.

இந்த தாக்குதலில் பெண்ணின் தாயார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மட்டு தலைமையக பொலிஸார் பெண்ணை கடத்திச் சென்றவர்களின் வீட்டை முற்றுகையிட்டு பெண்ணை மீட்டதுடன் கடத்தலில் ஈடுபட்ட பெண்ணின் கணவர் அவரது பெற்றோர் உட்பட 3 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 3 பேரையும் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை நாளை திங்கட்கிழமை வரை விளக்க மறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடன் மோத வடகொரியா தயார்

## கிம் ஜாங் உன் அறிவிப்பு

**(பியாங்யாங்)**

**அமெரிக்காவுடனான எந்தவொரு இராணுவ மோதலுக்கும் நாடு முழுமையாக தயாராக உள்ளதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.**

வடகொரியா ஏழாவது அணு குண்டு சோதனைக்கு தயாராகி வருவதாக கரிசனைகள் வெளியிடப்பட்டுள்ளமைக்கு மத்தியில் அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

வடகொரியத் தலைநகர் யொங்பியோங்கில் நடைபெற்ற கொரிய யுத்தத்தின் ஆண்டு நிறைவு விழா, வடகொரிய ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

1950 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இந்த யுத்தத்தில் அமெரிக்காவை வெற்றி கொண்டதாக வடகொரியா கூறிவருகின்றது.

இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் யொங்பியோங்கில் இராணுவ அணிவகுப்புகள், வாண வேடிக்கைகள் மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

இந்த வெற்றிக்கொண்டாட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய கிம் ஜாங் உன், அமெரிக்காவின் அணு ஆயுத அச்சுறுத்தல்கள் காரணமாக, தற்காப்பை உறுதி செய்யும் வரலாற்றுப் பணியை அவசரமாக மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.



வடகொரியாவின் வழக்கமான இராணுவப் பயிற்சிகளை ஆத்திரமூட்டும் செயற்பாடு என அமெரிக்கா தவறாக சித்தரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# ஈரானில் 3 பெண்களுக்கு ஒரே நாளில் தூக்குத் தண்டனை



(டெஹ்ரான்)

ஈரானில் 3 பெண்களுக்கு ஒரே நாளில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக, மனித உரிமைகள் தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஈரான் மனித உரிமைகள் குழுவின் கூற்றுப்படி, கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 32 பேர் தூக்கிலிடப்பட்டனர்.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இதுவரை இரண்டு மடங்கு அதிகமானோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதால், அதிகாரிகள் தங்கள் மரண தண்டனையை கணிசமாக முடுக்கிவிட்டதாக நம்பப்படுகிறது.

மற்ற எந்த நாட்டையும் விட ஈரானில் அதிகமான பெண்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுவதாக உரிமைக் குழுக்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில் பெரும்பாலோர் தங்கள் கணவர்களைக் கொன்ற குற்றவாளிகள் என்று கருதப்படுகின்றனர். (நி)

# ஆபிரிக்காவுக்கு வெளியே குரங்கு அம்மை உயிரிழப்பு பதிவானது

(ஸ்பெயின்)

ஆபிரிக்காவுக்கு வெளியே முதல் குரங்கு அம்மை உயிரிழப்பு பதிவாகியுள்ளது. இதன்படி, பிரேஸில் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் குரங்கு அம்மையினால் முதல் மரணம் ஏற்பட்டுள்ளது.

பிரேஸிலில் 41 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேபோல, ஸ்பெயின் அதன் முதல் மரணத்தை அறிவித்தது. இது ஐரோப்பாவில் முதல் மரணமாகும்.

கடந்த வாரம், உலக சுகாதார அமைப்பு, குரங்கு அம்மை உலகளாவிய சுகாதார அவசர நிலையாக அறிவித்தது.

ஆனால், நோய்த்தொற்றுகள் பொதுவாக லேசானவை மற்றும் பொது மக்களுக்கு ஆபத்து குறைவாக இருக்கும்.

குரங்கு அம்மை வைரஸ் பெரியம்மை போன்ற வைரஸ்களின் குடும்பத்தைச் சேர்ந்தது. இது பெரும்பாலும் மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தொலைதூர பகுதிகளில், வெப்பமண்டல மழைக்காடுகளுக்கு அருகில் நிகழ்கிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஏவுகணை தாக்குதலில் 40 உக்ரைனியர்கள் பலி ரஷ்யா-உக்ரைன் பரஸ்பர குற்றச்சாட்டு

(மொஸ்கோ)

ர்ஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள டோனட்ஸ் பகுதியில் உள்ள ஒனிவ்கா நகர சிறைச்சாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த உக்ரைனியர்கள் 40 பேர் உயிரிழந்துள்ளனர். 75 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை உக்ரைன் நடத்தியதாக ரஷ்யாவும், ரஷ்யாவே நடத்தியதாக உக்ரைனும் மாறி-மாறி குற்றஞ்சாட்டி வருகின்றன. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 210 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 500 | 550 |
| தக்காளி | 350 | 300 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 200 |
| கோவா | 350 | 280 | 300 | 350 |
| கரட் | 300 | 350 | 400 | 400 |
| பூசணி | 230 | 150 | 160 | 160 |
| புடோல் | 160 | 180 | 150 | 200 |
| வாழைக்காய் | 140 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 350 | 300 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 160 | 250 | 280 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 180 | 200 | 300 |
| கறிமிளகாய் | 600 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 240 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 150 | 120 | 160 |

# உலகளவில் உணவுத் தட்டுப்பாடு மாற்று வழிகள் குறித்து ஆய்வு



(பாரிஸ்)

உலகில் தற்பொழுது காணப்படும் மிகப்பெரிய பிரச்சினைகள் உணவுத் தட்டுப்பாடு மற்றையது எரிசக்தி பிரச்சினை ஆகும்.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் உலகளவில் தீர்வைக் கண்டு பிடிக்கும் நோக்கில் பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரண்டு நாடுகளும் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சவுதியின் முடிக்குரிய இளவரசர் மொகமட் பின் சல்மான் பிரான்ஸிற்கான தனது பயணத்தின் போது பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோனை நேற்று முன்தினம் சந்தித்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் சுகாதாரப்படுத்தப்பட்ட, தொற்று நீக்கப்பட்ட உணவு வகைகளை உலக நாடுகளுக்குள் எடுத்துச் செல்வது குறித்தும் மற்றும் எரிசக்தி பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் எட்டுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தும் தீவிர கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

# இயற்கை அனர்த்தங்களில் சிக்கி ஈரானில் 53 பேர் உயிரிழப்பு

## 16 பேரைக் காணவில்லை

(டெஹ்ரான்)

ஈரானில் பெய்த கனமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களில் சிக்கி சுமார் 53 பேர் உயிரிழந்தனர். மேலும் 16 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர்.

ஈரானின் 18 மாகாணங்களில் உள்ள 400 நகரங்கள் மற்றும் கிராமங்கள் வெள்ளத்தால் கடும் பாதிப்புகளை சந்தித்துள்ளன.

அனர்த்தங்களில் சிக்கி காணாமல் போனவர்களை தேடும் பணி இடம்பெற்று வருகிறது என அவசரகால நடவடிக்கை குழுவின் தலைவர் மெஹ்தி வாலிபூர் ஈரானிய அரச தொலைக்காட்சிக்கு தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 நாட்களே...

மூன் ஆகிய நாட்களில் மட்டும் நடத்த முடிவு செய்துள்ளதாக கல்வி அமைச்சின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

பாடசாலைகள் நடத்தப்படும் விதம் குறித்து பாடசாலைகள் அதிபர்களின் முடிவு செய்வார்கள் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## வழமைபோல...

குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொஸ்கம பொரலுகொட பகுதியில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது.

உலக வங்கி அவசர உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது. இந்த நிதி நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் நீதி மற்றும் சமத்துவத்தை பாதுகாக்கவே நாட்டில் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வேறு எந்தக் காரணங்களுக்காகவும் அல்ல எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## +3 மரணம்...

கள் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளன.

இதேவேளை, புதிய தொற்றாளர்கள் 83 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## கொரோனாவால்...

நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கடந்த 21ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குறித்த நபரின் மாதிரி எடுக்கப்பட்ட போது கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று சனிக்கிழமை குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (ம-7,60)

## ஓகஸ்ட் மாதத்தி...

க்கு மாதாந்தம் தேவைப்படும் 550 மில்லியன் டொலர்களை மாற்று முறைகளைப் பயன்படுத்தி கண்டுபிடிக்க வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதுகூட நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கை என்ற...

கண்டிக்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டி ஜனாதிபதி மாளிகையில் இருந்து விசேட உரையொன்றை ஆற்றிய போது இதனை தெரிவித்திருந்தார்.

நாம் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

"இது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒன்று. இது தொடர்பில் யாரும் விவாதம் செய்ய மாட்டார்கள். கொழும்பில் உள்ள சில அரசியல்வாதிகள் விவாதிப்பார்கள்."

"நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. இதன் விளைவாகவே இன்று நான் ஜனாதிபதி ஆகியுள்ளேன்.

நான் ஜனாதிபதி ஆனாலும் இன்றும் நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீரவில்லை.

இன்று நம் நாட்டில் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி இன்னும் மோசமானால் இலங்கை நாடே இல்லாமல் போய்விடும்.

நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்த நாம் பல நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம் மேலும் தீர்வுகளை காண உள்ளோம்.

நாட்டின் இன்றைய நிலைக்கு பல்வேறு விதமான காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் தற்போது இவற்றை குறித்து வாதாடிக்கொண்டு இருக்க போகிறோமா இல்லையெனில் இதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ளப் போகிறோமா என்பதை நாமே முடிவு செய்ய வேண்டும்.

வாதாடி தீர்வுகளைப் பெற முடியுமென்றால் வாதாடுங்கள் என்றே நான் கூறுவேன்" என்றார். (ம-7)

## இனப்பிரச்சினை...

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் இந்த மண்ணிலே புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் நாங்கள் பேசுவோம். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடும் நாம் பேசுவோம். ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19 தடவைகள் பேசியிருக்கிறோம். கோட்டபாய ராஜபக்ஷவுடனும் ஒரு தடவை பேசியிருக்கிறோம். இவ்வாறு இந்த நாட்டில் யார் யார் எல்லாம் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்களோ அவர்களுடன் எல்லாம் தமிழர் தரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 3 ஆம் திகதியன்று பாராளுமன்றில் தனது அக்கிராசன உரையை நிகழ்த்தவுள்ளார். இவர் தனது அக்கிராசன உரையில் புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிப்பாரா? அல்லது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்று அனுராதபுரத்தில் பதவியேற்ற போதும் சரி தனது அக்கிராசன உரையிலும் சரி மக்களால் விரட்டியடிக்கப்படும் வரை தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசாதது போன்று இவரும் செயற்படுவாரா? எனும் சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது

40 வருடங்களுக்கு மேலான அரசியல் அனுபவத்தை கொண்டுள்ள ஜனாதிபதி இந்த நாடு இப்படி பொருளாதார ரீதியில் அதளபாதாளத்திற்கு போவதற்கு பிரதான காரணமாக இருந்தது ஒரு இனத்தின் மீது நடைபெற்ற போர்தான் என்பதை புரிந்து வைத்திருப்பார். எம் மீது நடைபெற்ற இனவழிப்பின் பங்காளியாக இருந்தவர் எமது விடுதலைப் போராட்டத்தை சூழ்ச்சியால் பிரித்த ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார நிலையை சீர் செய்ய வேண்டும் என்றால் முதலில் இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றார். (ம-7)

## விதி...

மத்திய வங்கி நேற்று விடுத்துள்ளது.

இல்லையெனில், உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் வர்த்தக சமூகத்திற்கு எதிராக உரிய சட்ட விதிகளுக்குள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம-7)

## சர்வ...

இந்த நகர்வு ஏற்புடையது அல்ல என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கட்சிகள் இருக்கையில், தனிப்பட்டவர்களை இலக்கு வைத்து அனுப்பப்படும் கடிதம் பேரம் பேசுதலாகவே அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

## இலங்கையில் பல ஹோட்டல்களின் முன்பதிவுகள் இரத்து

(கொழும்பு)

இலங்கையில் சுற்றுலாப் பயணிகள் முன்பதிவு செய்த ஹோட்டல்களில் சுமார் 45% இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது .

நாட்டில் நிலவும் போராட்டங்கள், எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார நெருக்கடிகளும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவதற்கு காரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும் இந்நிலைமை இந்நாட்டின் சுற்றுலாத்துறையில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2022/07/30
சீட்டிழுப்பு இலக்கம் 4832
ஆங்கில எழுத்து: R
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 7 1 9 1 9
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.07.30
சீட்டிழுப்பு இலக்கம் 141
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 02 54 55 60
துலாம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 30/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1180
வெற்றி எழுத்து: F
சுப்பர் இலக்க: 11
வெற்றி இலக்கங்கள்: 04 21 24 47

### கொவிசெத

திகதி 2022.07.30
சீட்டிழுப்பு இலக்கம் 3074
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 23 25 64 78
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2022.07.30
சீட்டிழுப்பு இலக்கம் - 862
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 11 29 55 68

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1633
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.07.30
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,950,560/-
வெற்றி இலக்கங்கள்: 36 38 53 60
ஆங்கில எழுத்து: G
www.dlb.lk

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.07.30
சீட்டிழுப்பு இல: 3968
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,525,860/-
வெற்றி இலக்கங்கள்: 12 27 30 72
ஆங்கில எழுத்து: I
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 5,049,272/-
திகதி 2022-07-30
வெற்றி வாரம் 3519
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்: 11 18 29 46
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,341,400/-

### 25 வசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: U 22 07 08 23 40
சுப்பர் இலக்கம்: 22
சீட்டிழுப்பு வாரம் 983
வர்ணம் சிவப்பு
திகதி 2022.07.30 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 250,662,241/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சம்பத வாசனாவ — அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 514
திகதி 2022-07-30
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 12 43 56
விதி எண்: 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,570,020/-
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1807
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.07.30
தினம் சனிக்கிழமை
N 05 42 49 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,073,800/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(12133)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970



## வேலை வாய்ப்பு

இல. 46, பிறவுண் வீதி (Brown Road), யாழ்ப்பாணத்தில் (கலட்டி சந்திக்கு அருகாமையில்) இயங்கும் மிருக வைத்திய சத்திர சிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.
(A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது) (12296)

077 263 9573


# விபத்து; ஒருவர் பலி

(கொழும்பு)

நானுஓயா - குறுக்கு வீதியில் டிப்பர் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் விழுந்ததில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கரும்புப் ஏற்றிக் கொண்டு ஹட்டனை நோக்கி பயணித்த டிப்பரே இவ்வாறு விபத்துக்குள்ளானது. (ம-7)


## உடன் விற்பனைக்குண்டு

பலாலி வீதி கோண்டாவில் டிப்போவிற்கும் உரும்பிராய் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பிரிக்கப்பட்ட நிலையிலும் விற்கப்படும்.




தொடர்புகளுக்கு:-
077 229 4985
077 453 3612
(12268)



## A/L கணித, தொழிநுட்ப வகுப்புகள்

கிளிநொச்சி - NBMS
A9 வீதி, நீதிமன்றத்திற்கு அருகாமை.
- இணைந்த கணிதம்
- தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம்
- கணக்காளர் கற்கைநெறி (aat)

ஆரம்பம்: 01.08.2022, 10.45 a.m

விபரங்களுக்கு:
(12290) 077 663 0793



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4659)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உடைக்க இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (C-4659) (ஆங்கில அறிவு அவசியமானது)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



## மணமகள் தேவை

பிறப்பு - 1982 மார்கழி
இந்து விவாகரத்து ஆனவர்
நட்சத்திரம் - ரேவதி
உயரம் - 5' 10"
தொழில் - அரச தாதிய உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - குடும்ப பொறுப்புணர்ச்சி மிக்கவர் (12269)

077 325 8942



## வீடு விற்பனைக்கு

ஊரெழு பிள்ளையார் கோயில் கணேசா பாடசாலை அருகில் 12 பரப்பு காணியில் நவீன வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடும் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட மற்றும் ஒரு வீடும் பயன்தரு மரங்களுடன் (20 தென்னை, 20 கமுகு, பிலா, 5 மாமரம், மரவள்ளி, வாழை) விற்பனைக்கு உண்டு.

விலை - 46 மில்லியன் (12302)

077 082 1010
077 441 0919



## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

### இடமாற்றம்

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை யாழ். பிராந்திய அலுவலகமானது 01.08.2022 தொடக்கம் (A9 வீதி, நீதிமன்றம் முன்பாக) இல.20, நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டடம் 2 ஆம் மாடி, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

முகாமையாளர்,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை,
யாழ்ப்பாணம்.
(12263) 021 222 0010



## வாகன சுத்திகரிப்பாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு நல்ல அனுபவம் உள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு (12304)

077 232 3000




## மணமகள் தேவை

யாழ். இந்து 1978 அரச உயர் பதவியில் இருக்கும் அழகிய மணமகனுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம். செவ்வாய் குற்றம் இல்லை, விவாகரத்தானவர் (இந்து, கத்தோலிக்கம் பரவாயில்லை) (12306)

076 690 1212


# மரண அறிவித்தல்



## திரு. நடனகனகசபை பாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற தொழில் திணைக்கள அதிகாரி)

யாழ். கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடனகனகசபை பாலகிருஷ்ணன் அவர்கள் 28.07.2022 கடந்த வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடனகனகசபை - மதிவதனநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - பரிமளரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் செந்தூர்ச்செல்வி (செல்வி அக்கா) அவர்களின் அன்புக் கணவரும் அருண்பிரகாஷ், ராம்பிரகாஷ், மைதிலி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கீதா, கௌசிகா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷான், கேஷன், அனிக்கா, ஆத்மன், ஆத்மிகா, அர்ச்சுனன், அஜேய் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் சிவபாலன், பதுமைநிதி, செல்வநிதி, ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமகள், திருஞானசம்பந்தன், சௌந்தரநாயகி, சண்முகநாதன், ஸ்ரீசிவகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். கொழும்புத்துறையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யோகர்சுவாமி ஆச்சிரமம் அருகில்
94, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (12308)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
021 221 4992


## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
## Water Proofing

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

உலகத்தரம்மிக்கது
வட மாகாணத்தில் முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள் (12303)

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000



## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 60 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம். (12277)

பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.